346



OFFICE ... THE RE...
2 - AUG ...
MADRAS

# தமிழ்க் களஞ்சியம்

முதற் புத்தகம்

SANTHOSH

34...
3-69

TB
031(6)
N48
86503

346
3-42

# தமிழ்க் களஞ்சியம்

முதற் புத்தகம்

TAMIL
MIDDLE SCHOOL READERS
BOOK I

க. ப. சந்தோஷம், B.A., L.T.
*Late Headmaster, Voorhees College High School, Vellore*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - AUG 1949
MADRAS

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE COLOMBO
1949

*COPYRIGHT*

*Fourth Edition*, 1948 *M*
*Fifth Edition*, 1949 *M*

TB
031(6)
N48

86503

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA—1949. B9456

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - AUG 1949
MADRAS

# பதிப்புரை

கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தாரின் தமிழ்க் களஞ்சியத்துட் புகுந்து, ஆங்குக் காணக்கிடக்கும் தமிழ்க்கூலத்தினைக் கவர்ந்து, தமிழ்மாணவர் களிப்பெய்துவர் என்பது உறுதி. திருவாளர் க. ப. சந்தோஷம் அவ்வவ் வகுப்புகட்குப் பொருந்துமாறு அறிவூட்டுங் கட்டுரைகளும், சிறந்த கதைப்பாட்டுகளும், இனிய கதைகளும், உளங் கவரும் உரையாட்டுகளும், தகுந்த செய்யுட் பாடங்களும் அமைத்து மாணுக்கரை மகிழ்விக்கக் கருதியுள்ளார். பாடங்கள் ஒழுங்காக முறைப்படுத்தப்பட்டுள்ளன. இனிய தமிழில் எழுதப்பெற்றுள்ளன. இவற்றைப் படிப்பதால் மாணுக்கருக்குத் தமிழ்ப்பற்றும், மொழியறிவும், ஒழுக்க உணர்வும் எற்படுமாதலின், பள்ளிக்கூடத் தலைவர்களும், ஆசிரியன்மாரும் இக்களஞ்சியத்தினை மாணுக்கர் திறந்து நலமுறத் துணைசெய்வார்களாக.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குருநாதன் ... | 1 |
| 2. | நரியும் சேவலும் (ஆங்கிலப் புலவர் 'சாசர்' எழுதியதைத் தழுவியது) ... | 7 |
| 3. | அறிவு ... | 13 |
| 4. | மாணத்தைக் கொல்ல முயன்ற மூடர்கள் (ஆங்கிலப் புலவர் 'சாசர்' எழுதியதைத் தழுவியது) ... | 19 |
| 5. | முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ... | 24 |
| 6. | மரங்கள் ... | 27 |
| 7. | பள்ளி போகாப் பரஞ்சோதி ... | 33 |
| 8. | புலி தேடிச்சென்ற சிறுவன் ... | 37 |
| 9. | புல்லுண்ணும் மிருகங்கள் ... | 41 |
| 10. | கிறிஸ்துபெருமான் பொன்னுரை ... | 46 |
| 11. | உணவு ... | 47 |
| 12. | முஸ்தாபா (ஒரு பிரஞ்சுக் கதை) ... | 52 |
| 13. | வேடுவர் காணிக்கை (சிலப்பதிகாரம்) ... | 56 |
| 14. | ஜி. யூ. போப் ஐயர் ... | 59 |
| 15. | தண்ணீர் ... | 65 |
| 16. | சாமுவேல் ... | 70 |
| 17. | தீமைக்கு நன்மை (ஒரு கதைப் பாட்டு) ... | 76 |
| 18. | மனோன்மணீயம் (1) தாம்பிரவர்ணி ... | 78 |
| | (2) அருணோதயம் ... | 79 |
| 19. | நகையும் நாணயமும் (ஒரு சம்பாஷணை) ... | 81 |
| 20. | நெருப்பு ... | 83 |


## செய்யுட் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | நாலடியார்—கல்வி ... | 91 |
| 2. | திருக்குறள் ... | 92 |
| 3. | இரட்சணிய யாத்திரிகம் இகபர சந்திப் படலம்—உத்தரசுருதி ... | 97 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 1949
MADRAS

# தமிழ்க் களஞ்சியம்

## முதற் புத்தகம்

### 1. குருநாதன்

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் இடைவிடாமல் மழை பெய்துகொண்டிருந்தது. மாலே நேரத்தில் மழை சிறிது நின்று மறுபடியும் இரவெல்லாம் பெய்தது. மழையோடு காற்றுங் கலந்து வீசினது. திங்கட்கிழமைக் காலேயில் எங்கே பார்த்தாலும் நிலம் நன்ருக நனேந்து வாய்க்கால்கள் நிறைய நீர் ஓடினது. மரம், செடி, பயிர்களெல்லாம் மழையால் கழுவப்பட்டு அழகாய்த் தோன்றின. மேகங்களில் மறைந்துகிடந்த சூரியன், காலே சுமார் ஏழு மணிக்குமேல் வெளிவந்து ஒளிவீசினுன். அந்த இள வெயிலில் தோப்பும் வயலும் பார்ப்பதற்கு மிக இனிமையாயிருந்தன. குளத்திலுள்ள தாமரை இலேகள்மேல் தங்கிய நீர்த்துளிகள் வயிரக் கற்கள்போல் பிரகாசித்தன. கிளிகள் ஒன்றையொன்று கொஞ்சிக் கூவி அங்கும் இங்கும் பறந்தன. வீட்டுக் கூரையின்மேல் காகங்கள் கரைந்தன. மரக்கிளேகளில் அமர்ந்து மைனுக்குருவிகள் குலாவின.

மணி எட்டானது. சூரியன் மறைந்தான். மறுபடியும் மழை தொடங்கியது. புத்தூர் என்ற கிராமத்தில் வசித்த குருநாதன் என்ற பிள்ளேயாண்டான் பள்ளிக்குப்போகும் வேளேயாயிற்று. இரண்டு மைல் தூரத்திலுள்ள ஆற்றூர் என்ற நகரத்தில் அவனுடைய பள்ளிக்

கூடமிருந்தது. குருநாதன் ஒருநாளுந் தவறுமல் பள்ளிக் கூடம்போவான். அன்று மழைபெய்ததால் அவனுடைய தகப்பனுருந் தாயாரும் பள்ளிக்கூடம் போகவேண்டா மென்று அவனைத் தடுத்தார்கள். அதைக்கேட்டு அவன் அழுதான். குருநாதனுடைய தாய்தந்தையர் ஏழைகள். அவர்கள் வீட்டில் குடையே இல்லை. பள்ளிக்கூடம் போகவேண்டுமென்று அழுத குருநாதனை, அவனுடைய அன்னையார் பார்த்து, "மழையிலே நனைந்து நீ எப்படி அப்பா பள்ளிக்கூடம் போவாய்?" என்று கேட்டார். "நான் தலையிலே பலகையை வைத்துக்கொண்டு ஓட்டமாய் ஓடிவிடுவேன்" என்று குருநாதன் சொன்னுன். அவனுடைய தகப்பனுர் கொஞ்சநேரம் யோசித்துப் பின் தம்முடைய கம்பளிச் சட்டையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். குருநாதன் அதை யணிந்துகொண் டான். அந்தச் சட்டை அவன் முழங்கால்மட்டுந் தொங் கினது. சட்டையின் கைகளும் அவனுடைய விரலுக்கு மேல் நீளமாய்த் தொங்கின. சட்டையின் கைகளை மடித்து மேலே தூக்கிவிட்டார்கள். உடைநாணயம் அறியாத குருநாதன் சட்டையைப் போட்டுக்கொண்டு குதித்தான். இதன் பிறகு அவன் தலையில் புஸ்தகங்களை வைத்து, அதற்குமேல் பலகையை வைத்து ஒரு கையால் பிடித்துக்கொண்டு ஓட்டமாய்ப் போனுன்.

புத்தூரிலிருந்து ஆற்றூருக்குப் போகும் வழியிலே, வெள்ளாறு என்ற நதி இருந்தது. நதியின்மேலுள்ள பாலத்தில் குருநாதன் வந்தான். ஆற்றில் போகும் வெள்ளத்தை அவன் இரண்டு மூன்று நிமிஷம் நின்று பார்த்தான். பாலத்தின்மேல் வண்டிகள் குடுகுடுவென்று ஓடுவதையும், ஆற்றில் நீர் இரைந்து செல்வதையும், வெள்ளங் கரையை இடிப்பதால் மரம், செடி முதலியன ஆற்றில் வந்துவிழுவதையும், கரையை யடுத்துள்ள வயல்



OFFICE OF THE REGISTRAR OF
AUG 1949
MADRAS

களில் தவளைகள் தோம், தோம் என்று கத்துவதையும் அவன் கண்டு மகிழ்ந்து:

> நேற்றுமுதல் காற்றுமழை கூடி நின்று பெய்யவே
> ஆற்றில் வெள்ளம் சாடிவந்து ஓலமிட்டு ஓடவே
> அண்டையுள்ள செடியும் மரமும் ஆற்றில் வந்து கூடவே
> தொண்டைவற்றத் தவளை எல்லாம் தோம் தோம் என்று பாடவே

என்று பாடியாடினான். அப்பொழுது பாலத்தின்மேல் ஒரு மோட்டார்வண்டி வேகமாய் வந்தது. அது பாதையிலிருந்த சேற்றை இருபுறமும் சிதறச் செய்ததால், நீண்ட சட்டைபோட்டிருந்த குருநாதன் தன் மேல் படிந்த சேற்றை நோக்கி வருந்தினான். மழை பெய்துகொண்டே இருந்தது. சில உழவர்கள் தலையிலும் கையிலும் நாற்றுக்கட்டை எடுத்துக்கொண்டு எதிரில் வருவதையும், மழையில் நனைந்துகொண்டே அவர்கள் செல்

வதையும் கண்டு, இதை வேகமாகப் போய்ப் பள்ளித் தோழர்களுக்குச் சொல்ல நினைத்து,

சேற்றைவாரி மேலேவீசி மோட்டார் வண்டி ஓடவே
காற்றுவீச தேகங்கூச மரங்கள் சாய்ந்து ஆடவே
நாற்றைக் கொண்டு வேலை செய்வோர் நனைந்து வயலை நோக்கவே
ஆற்றூர்ப் பள்ளிதன்னைக்கூட விரைவேன் தோழர் பார்க்கவே

என்று மறுபடியும் பாடிக்கொண்டே குருநாதன் வேகமாய் நடந்தான். பாலத்தை விட்டு இறங்கி ஆற்றூரையடுத்து வருகையில், ஒரு பெரியவர் குடைபிடித்து மெதுவாக நடந்து சென்றார். திடீரென்று பலத்த காற்று வீசி, அவர் கையிலிருந்த குடையை அடித்துக்கொண்டு போயிற்று. பெரியவர் மழையில் நனைந்துகொண்டு நின்று விழித்தார். இது கண்ட குருநாதன் சாப்பாட்டைக் கீழே வைத்துவிட்டுக் குடையின் பிறகே குதித்து ஓடினான். குடை தலைகீழாயுருண்டு சென்று சேறுநிறைந்த வயல் ஒன்றில் சிக்கிக்கொண்டது. அதை எடுத்து ஒரு வாய்க்காலிற் கழுவி வேகமாய் நடந்துவந்து பெரியவரிடம் கொடுத்து, "ஐயா, குடையைப் பிடித்துக்கொள்ளுங்கள். மறுபடியுங் காற்று வீசினால் குடையை விட்டுவிடவேண்டாம்" என்று வணக்கமாய் மொழிந்தான். பெரியவர் மிகவும் மகிழ்ந்து குருநாதனுக்கு நன்றி செலுத்தி, அவனைத் தம்மோடு குடையின்கீழே அழைத்துக்கொண்டுபோனார். இருவரும் பேசிக்கொண்டே நடந்து நகரத்துக்குள்ளே போனார்கள்.

அவர்கள் நகரத்துள் வந்தபொழுது அங்கே ஒரு வீட்டின் திண்ணையின்மேல் சில பிள்ளைகள் மழை பெய்வதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் குரு

நாதனையும் அவனோடு வந்த பெரியவரையும் பார்த்து, "தாத்தா சட்டையை இந்தப் பையன் போட்டுக்கொண்டான்" என்று உரக்கப் பேசிக் கைதட்டி நகைத்தார்கள். இது கண்ட குருநாதன், தானும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தான். பெரியவர் குருநாதனுடைய நல்ல குணத்தையறிந்து அவன்மேல் அன்புகொண்டு அவனுக்கு ஏதாவது நன்மை செய்ய எண்ணங்கொண்டார்.

அவர்கள் இன்னுஞ் சிறிது தூரம் நடந்துபோகையில் மளமளவென்று ஒரு சத்தங் கேட்டது. பெரியவர் காதில் அந்த ஓசை விழவில்லை. குருநாதன் சத்தங்கேட்டவுடனே அசையாமல் நின்றுவிட்டான். எங்கேயிருந்து அந்த ஓசை வந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. பெரியவர் அசையாமல் நின்று விழித்த குருநாதனை நோக்கி, "ஏனப்பா நிற்கிறாய்? வா போவோம்" என்றார். மறுநிமிஷத்தில் மடமடவென்று ஒரு சத்தங் கேட்டது. இதைக் கேட்டுப் பெரியவர் திகைத்தார். இரண்டு மூன்று விநாடிகள் செல்லவும், பாதையின் ஓரத்தில் வளர்ந்து நின்ற ஆலமரத்தின் கிளையொன்று முறிந்து குறுக்கே பாதையில் விழுந்தது. அவர்கள் நின்ற இடத்துக்கும் கிளைவிழுந்த இடத்துக்கும் கொஞ்சதூரந்தானிருந்தது. விழுந்த கிளையை வயோதிகர் கண்டு நடுங்கினார். பிறகு அவர் குருநாதனை நோக்கி, "அப்பா, தெய்வந்தான் உன்னை என்னோடு சேர்த்து அனுப்பினது. நீ என்னோடு இல்லாவிட்டால் என் கதி என்ன ஆயிருக்கும்?" என்று சொல்லி குருநாதனை அணைத்து ஆசீர்வாதம் செய்தபின் அவனுடன் தமது வீடு சென்றார்.

வயோதிகர் குருநாதனுக்கு என்ன நன்மை செய்திருப்பார்?

## குறிப்புகளும் வினாக்களும்

I. ஞாயிறு + கிழமை = ஞாயிற்றுக்கிழமை

ஞாயிறு = சூரியன்

திங்கள் + கிழமை = திங்கட்கிழமை

திங்கள் = சந்திரன்

செவ்வாய் + கிழமை = செவ்வாய்க்கிழமை

செவ்வாய் என்பது சிவந்த நிறமுள்ள ஒரு கிரகம். அங்காரகன் என்றும் இதற்குப் பெயர். ஆங்கிலத்தில் இதை Mars என்பர்.

புதன் + கிழமை = புதன்கிழமை

இக்கிரகத்திற்கு ஆங்கிலத்தில் Mercury என்று பெயர்.

வியாழன் + கிழமை = வியாழக்கிழமை

வியாழனுக்கு குரு என்றும் பெயர். இதற்கு ஆங்கிலத்தில் Jupiter என்று பெயர்.

வெள்ளி + கிழமை = வெள்ளிக்கிழமை

இதற்கு சுக்கிரன் என்றும் பெயர். இதை ஆங்கிலத்தில் Venus என்பர்.

சனி + கிழமை = சனிக்கிழமை

இதைச் சனியன் என்றும் சொல்வதுண்டு. இதற்குக் கலி என்றும் பெயர். ஆங்கிலத்தில் இதை Saturn என்று சொல்வார்கள்.

II.

| | | | | |
|---|---|---|---|---|
| பயிர்கள் | + | எல்லாம் | = | பயிர்களெல்லாம் |
| தூரத்தில் | + | உள்ள | = | தூரத்திலுள்ள |
| பள்ளிக்கூடம் | + | இருந்தது | = | பள்ளிக்கூடமிருந்தது |
| வேண்டும் | + | என்று | = | வேண்டுமென்று |
| பாதையில் | + | இருந்த | = | பாதையிலிருந்த |

நிலைமொழியின் முடிவில் ஒற்றெழுத்து இருக்க வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் அவ்விரண்டெழுத்துங்கூடி ஒருயிர் மெய்யெழுத்தாகும்.

ள் + எ = ளெ

ல் + உ = லு

ம் + இ = மி

## 2. நரியும் சேவலும்

ஒரு மலையடிவாரத்தில் பழத்தூர் என்ற பெயருடைய கிராமத்தில் சின்னசாமி என்ற ஒரு குடியானவன் குடிசை ஒன்று கட்டி அதில் வாழ்ந்துவந்தான். அவன் அதிகப் பாடுபட்டு மலையடிவாரத்திலிருந்த சில நிலங்களைப் பண்படுத்திப் பயிர்செய்தான். இவனிடம் சில ஆடு மாடுகளும், அழகான பெரிய சேவல் ஒன்றும், பல பெட்டைக்கோழிகளும் இருந்தன.

அந்தச் சேவல் சிவப்பும் கறுப்பும் கலந்த இறகுகளையுடையது. அது காலையில் கூட்டைவிட்டு வெளியே வந்தவுடனே பெட்டைக்கோழிகளைச் சுற்றிக் கொக்கரித்து விளையாடி இரைதேடப்போகும். நெல், சோளம், கம்பு முதலிய தானியங்கள் எங்கேயாவது கிடந்தால், அந்தச் சேவல் பெட்டைகோழிகளைச் சிறுகுரல் காட்டி அழைக்கும். பகற்பொழுதெல்லாம் சேவலும் பெட்டைகளும் குடிசையைச் சுற்றித்திரிந்து இரவில் குடிசையை அடுத்திருந்த ஒரு கூட்டிற்குள்போய் அடைந்துவிடும். பொழுதுபோனவுடனே சின்னசாமி கோழிகளைக் கூட்டிற்குள்விட்டு மிகப் பத்திரமாய் அடைத்துவிடுவான்.

அடுத்திருந்த மலையில் ஒரு குள்ளநரி வசித்து வந்தது. அது ஒருநாள் விடியற்காலம் நிலவு வெளிச்சத்தில் சிறிது தூரத்திலிருந்த ஊருக்குச் சென்று உணவு கிடைக்காது திரும்பிவந்தது. சின்னசாமியின் குடிசையருகே அது வரும்பொழுது கூட்டிற்குள்ளிருந்த சேவல் நீண்ட குரலெடுத்துக் கூவினது. அந்தத் திருட்டு நரி உடனே மெதுவாகக் கூட்டின் அருகே போய்ப் பார்த்தது. ஆனல், அது கூட்டில் நுழைவதற்கு வழியேயில்லை, விடியற்காலமானதால் சின்னசாமி ஏர் உழுவ

தற்கு மாடுகளை ஓட்டிக்கொண்டுபோக வெளியே வந்தான். அவன் வருவதைக்கண்ட நரி ஒரே பாய்ச்சலாய் ஓடிவிட்டது.

அந்தநாள் நரி அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டாலும் கூண்டிலுள்ள கோழிகளைப் பிடித்துத் தின்னவேண்டுமென்ற ஆசை அதை விடவில்லை. ஒவ்வொரு நாளும் அது சின்னசாமியின் குடிசை வழியாகவே போக ஆரம்பித்தது. இப்படிப் பல நாள் சமயம் பார்த்துக்கொண்டிருந்தும் ஒரு கோழியாவது நரிக்கு அகப்படவில்லை இரவில் கூண்டில் அடைபட்ட கோழிகளைப் பிடிக்க முடியாதென்று நரிக்கு நன்றாகத் தெரிந்தது. பகலிலேயே ஒருநாள் குடிசைக்குப்போய்த் துணிந்து பார்க்கலாம் என்று அந்த நரி ஒரு தீர்மானம் செய்துகொண்டது.



ஒருநாள் பொழுதுவிடிந்தபின் சேவலும் பெட்டைக் கோழிகளும் கூட்டைவிட்டு வெளியே வந்தன. சேவல் சின்னசாமியின் குடிசையின்மேல் ஏறி நின்று சிறகடித்

துக் 'கொக்கரக்கோ, கொக்கரக்கோ' என்று கூவினது. குடிசைக்குப்பின் பதுங்கியிருந்த நரி வெளியே வந்து அந்தச் சேவலை நோக்கி, "எனது நல்ல நண்பனே! நான் உனது இனிய பாடலைக்கேட்டு மகிழ்வதற்காக, கால் களைக்க நெடுந்தூரம் நடந்து வந்திருக்கிறேன்; உன்னைப் போல் பாடுகிறவர்கள் யாரிருக்கிறார்கள்? என்மீது மன மிரங்கி நீ சிறிது பாடவேண்டும்" என்று தந்திரமாய்ச் சொன்னது. இந்த வார்த்தைகளைக் கேட்ட சேவல், "நல்லது நண்பனே! நீ விரும்புகின்றபடி நான் பாடுகின் றேன், உற்றுக்கேள்" என்று மொழிந்து கூரைமேல் நின்றபடியே முன்போலக் 'கொக்கரக்கோ' என்று கூவி னது.

சேவல் கூரையில் நிற்கும்வரையில் அதைப் பிடிக்க முடியாதென்று கண்ட நரி, மறுபடியும் சேவலைப் பார்த்து, "சிநேகிதா! நெடுந்தூரம் நடந்துவந்த என் னைக் கீழே நிறுத்திவிட்டு நீ கூரையின்மேல் உயர நின்று பாடுவது சரியா? கீழே இறங்கிவந்து என்னருகில் நின்று பாடினால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! நான் காதாரக் கேட்டு மனமார மகிழ்வேன்" என்றது.

நரிபேசிய நயவஞ்சகவார்த்தையை உண்மை என்று நம்பி, சேவல் கீழே பறந்துவந்து நரியின் அருகே போய் நின்றது. தந்திரமுள்ள குள்ளநரி சேவலை நோக்கி, "தோழனே, உன்னுடைய சிறகுகள் எவ்வளவு அழகா யிருக்கின்றன! உன்னுடைய கொண்டை கோபுரம் போல் உயர்ந்து நிற்கிறது. உன்னைப்போல் அழகுள்ள பறவையை நான் எங்குங் கண்டதில்லை. உன்னுடைய இறகுங் கொண்டையும் அழகாயிருப்பதுபோல் உனது பாடலும் இனிதாயிருக்கிறது. எத்தனை முறை உனது பாட்டைக் கேட்டாலும் இன்னும் கேட்கவேண்டுமென்று

தான் ஆசையுண்டாகிறது" என்று தந்திர வார்த்தைகள் கூறினது. நரியின் சொல்லைக் கேட்ட சேவல் மிகவும் சந்தோஷப்பட்டு நிமிர்ந்துநின்று தலையை மேலே தூக்கிக் 'கொக்கரக்கோ' என்று பல தடவை கூவிக்கொண்டு நின்றது.

இதுதான் நல்ல சமயம் என்று நரி உறுதிசெய்து கொண்டு, ஓரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து சேவலை வாயிற்



கௌவிக்கொண்டு மிக ஆனந்தமாய் அவ்விடத்தைவிட்டு ஓடினது. நரியின் சொல்லைக் கேட்டு ஏமாற்றமடைந்த சேவல், அதன் வாயிலகப்பட்டபின், தனது மடத்தன்மையை நினைத்துப் பெரிதும் வருந்தி, "இந்த வேளை எனக்கு உதவிசெய்வார் ஒருவருமில்லையே" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு பெரிய கூச்சலிட்டது.

சேவலிட்ட கூச்சலைக்கேட்ட பெட்டைக்கோழிகள் அங்குமிங்கும் பறந்தோடின. வயலுக்குப் போயிருந்த சின்னசாமி வீட்டிற்குத் திரும்பினான். சேவலைக் கௌவிக்கொண்டு ஓடுகின்ற நரியை அவன் பார்த்துவிட்டான். உடனே அவன் வயல்களில் வேலைசெய்துகொண்டிருந்த பலரைக் கூப்பிட்டான். நாலைந்துபேர் ஓடிவந்தார்கள். சின்னசாமியுடன் அவர்களும் சேர்ந்து தடிகளை எடுத்துக்கொண்டு நரியின்பிறகே ஓடினார்கள். இவர்களில் ஒருவன் ஒரு கல்லை எடுத்து நரியின்மீது வீசி எறிந்தான். தந்திரமுள்ள நரி பின்திரும்பிப் பார்த்துக்கொண்டே அதிவேகமாய் ஓடிவிட்டது. கற்களை வீசி எறிந்துகொண்டு பின்னே ஓடிவருகிறவர்களைப் பார்த்து நரி சிறிது பயந்தது. இதை அறிந்த சேவல் நரியைப் பார்த்து, "அஞ்சா நெஞ்சமுடைய தோழா! நீ ஏன் இப்

படி ஓடுகின்றாய்? உன்னைப்பிடிக்க யாரால் முடியும்? நான் இப்படி அஞ்சி ஓடமாட்டேன். ஆனால், துரத்திக் கொண்டு வருகிறவர்களைப் பார்த்து, 'உங்களால் என்னைப் பிடிக்கமுடியுமோ?' என்று ஒரு வார்த்தை கேட்பேன்," என்று மொழிந்தது.

இந்தப் பேச்சைக்கேட்ட நரி, பின்னே ஓடிவருகிறவர்களைத் திரும்பிப்பார்த்து, "என்னைப் பிடிக்க உங்களால் முடியுமோ?" என்று கேட்க வாய் திறந்தது. நரி வாயைத் திறந்த மாத்திரத்தில் அந்தச் சேவல், "பிழைத்தேன், பிழைத்தேன்!" என்று சொல்லிக்கொண்டே அருகிலிருந்த மரத்தின்மேல் பறந்து ஏறிக்கொண்டது.



இந்தச் செய்தி நடந்த இடத்திற்கும் சின்னசாமி முதலியோர் ஓடிவந்த இடத்திற்கும் வெகுதூரமிருந்தது. ஆகையால், நரி, சேவலைப்பிடிக்க முயற்சிசெய்து மரக்கிளையில் நின்ற சேவலை நோக்கி "அழகுமிக்க தோழா! விளையாட்டிற்காகவே நான் உன்னைப் பிடித்துக்கொண்டு வந்தேனேயொழிய உன்னைத் தின்பதற்காகப் பிடிக்கவில்லை. இல்லாவிட்டால் இப்பொழுது நான் உன்னை விட்டிருப்பேனோ? நீ அச்சமின்றிக் கீழே இறங்கி வா; என்னுடைய வீட்டிற்கு உன்னை நான் அழைத்துக்கொண்டு போவேன். சந்தேகப்படவேண்டாம்," என்று உருக்கத்தோடு பேசினது.

இதைக்கேட்ட சேவல், "போ, போ, குள்ளநரியே, உன்னை நான் நன்றாயறிவேன். இனியும் நான் உன் சொல்

கேட்டு இறங்கிவருவேனோ? இருட்டில் வெளியே திரியும் திருட்டுப்பயலே! தடியடிபட்டு உன் தலை உடையவேண்டுமாயின் நில். இல்லாவிடின் செல். வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டிய இடத்தில் வாயைத் திறப்பவன் முட்டாள். இது உனக்கும் எனக்கும் பொதுவான நியாயம்" என்று உரத்துக் கூறினது. இனிமேல் நிற்பது ஆபத்து என்பதையுணர்ந்த நரி, மின்னல் மின்னி மறைவதைப் போல் அவ்விடத்தைவிட்டு மறைந்தது.

## குறிப்புகளும் வினுக்களும்

1. பெட்டை + கோழி = பெட்டைக்கோழி
2. கோழி + கூண்டு = கோழிக்கூண்டு
3. கோழி + கால் = கோழிக்கால்

கோழி + தலை = ?
கோழி + மூக்கு = ?
கோழிக்குக் "குக்குடம்" என்றும் பெயர்.
நரிக்குக் கொம்புண்டா? இல்லை.

புல்லுண்ணு மிருகங்களுக்குத்தான் கொம்புண்டு. நரி மாமிச பக்ஷிணி. இது மிகத் தந்திரமுடையது. இதன் தந்திரத்தைப்பற்றிப் பஞ்சதந்திரம் முதலிய நூல்களிற் படியுங்கள்.

நரி + தந்திரம் = நரித்தந்திரம்
நரி + தலை = நரித்தலை
நரி + பல் = நரிப்பல்
நரி + வால் = ?
நரி + மயிர் = ?

## 3. அறிவு

உயர்ந்த மலைகளில் கழுகுகள் முதலிய பறவைகள் வாழ்கின்றன. பெரிய மரங்களில் பருந்து, கூளி முதலி யவை வசிக்கின்றன. இவைகள் ஆகாயத்தில் வட்ட மிட்டுப் பறந்து, கீழே நிலத்தில் வெகு தூரத்தில் தங்க ளுக்கு அகப்படக்கூடிய இரையைப் பார்க்கின்றன. இவைகளுடைய பார்வை மிகக் கூரியது. இந்த வகையில் மக்கள் பறவைகளுக்கு இணையாகமாட்டார்கள். மனித ருடைய பார்வை வெகுதூரஞ் செல்லாது.

ஓசைகளைக் கேட்பதிலும் மனிதருக்கு இருக்கும் சக்தி மிகக் குறைந்தது. ஆடு, மாடு, குதிரை முதலியவை மனிதர் செவிக்கெட்டாத ஓசைகளை அறிந்துகொள்ளக் கூடியவைகளாக இருக்கின்றன. இவைகள் தங்களுடைய காதுகளை ஓசை பிறக்கின்ற திசைக்கு நேரே திருப்பக் கூடியவை. நாம் நம்முடைய காதுகளை இப்படித் திருப்ப முடியாது. பசுவைப்போல் காதுகளைத் திருப்பக்கூடிய சக்திக்கு 'கோகர்ணம்' என்று பெயர். (கோ = பசு, கர்ணம் = காது.) காதின் மேல்பாகத்தைக் கீழும் மேலும் அசைக்கக்கூடிய சக்தி யானைக்கிருக்கிறது. இந்த சக்திக்கு 'கஜகர்ணம்' என்று பெயர். (கஜம் = யானை, கர்ணம் = காது.) மனிதர்களால் இதைச் செய்யமுடி யாமைபற்றி, ஒரு காரியத்தைச் செய்து முடிக்கக் கூடாமையைக் கூறுவதற்கு, "கோகர்ணம், கஜகர்ணம் போட்டாலும் முடியாது" என்று சொல்லும் வழக்க மிருக்கிறது. மனிதர்களுடைய காது, விலங்குகளுடைய காதுகளைப்போன்று கூர்மையானதன்று.

முகர்ந்து வாசனையறிவதிலும் மனிதர் விலங்கு களுக்கு ஒப்பாகமாட்டார். நாய் வாசனை பிடிப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது பெரும்பாலும் வாசனையறிவதினாலேயே பிழைக்கிறது. வேட்டையாடப்

போகின்றவர் நாயை எதற்காகக் கூட்டிக்கொண்டு போகின்றார்? காட்டில் மறைந்திருக்கும் விலங்குகளை வாசனையாலறிந்து காண்பிப்பதற்கல்லவா? மனிதரே இந்த வாசனையை உணர்ந்துகொள்ளக்கூடுமானால் நாய்களினுதவி அவ்வளவு வேண்டுவதில்லை. பாலிருக்குமிடத்தைப் பூனையும், நெய்யிருக்குமிடத்தை எறும்பும் தூரத்திலிருந்தே வாசனையாலறிகின்றன. நமக்கு இந்த சக்தியில்லை.



யானையை மரத்துண்டுகளைத் தூக்க உபயோகித்தல்

தேக பலத்தில் யானை, குதிரை, சிங்கம், புலி முதலியவை மனிதனைவிட உயர்ந்தவை. ஒரு சிங்கம் ஒரு பெரிய மான் அல்லது மாட்டைக் கௌவிக்கொண்டு மூன்று நான்கடி உயரமுள்ள வேலிகளையுந் தாண்டிச் செல்லக்கூடிய வலிமையுடையதாக இருக்கிறது. யானையினுடைய பலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அது மிக இலேசாக மனிதனைத் தூக்கி நிலத்தில்

அறைந்து கொல்லும்; மரங்களையும் குத்திச் சாய்க்கும். யானையையுந் தாக்கும் வலிமையும் ஆண்மையும் புலிக் குண்டு. இவைகளோடு நம்மை ஒப்பிட்டுப்பார்க்கையில் நமது பலம் எவ்வளவு குறைந்தது என்பது விளங்குகிற தல்லவா?

விரைவாய் ஓடுவதிலும் நாம் விலங்குகளைவிடத் தாழ்ந்தவர்களே; பெரிய உருவத்தையுடைய யானையும், மனிதனைவிட வேகமாய்ச் செல்லக்கூடியது. மான் குதிரை முதலியவற்றின் வேகத்தை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அவைகளோடு நீங்கள் ஓடமுடியுமா? இப்படி யிருக்க, எந்தவகையில் பறவைகளையும் விலங்குகளையும் விட மனிதன் சிறந்தவனுவான்? அவனுக்கு ஒரு மைல்




தூரதிருஷ்டிக் கண்ணுடி

தூரம் பார்க்கக்கூடிய திறமை இல்லாவிட்டாலும், ஒன்பதுகோடி மைல்களுக்கப்பாலுள்ள சூரியன் முதலிய நட்சத்திரங்களை உற்றுப்பார்ப்பதற்கு உதவுகின்ற தூர திருஷ்டிக் கண்ணாடியை அவன் செய்திருக்கிறான். இது மிகவும் அதிசயமல்லவா? எந்தப் பக்ஷியும் எந்த விலங்கும் காணமுடியாத மிகச் சிறிய கிருமிகள் காற்றிலும் நிலத்திலும் நீரிலும் இருக்கின்றன. மனிதன் பூதக் கண்ணாடியின் உதவியினால் இவைகளையும் பார்க்கக்கூடியவனாய் இருக்கிறான்.



கம்பி இலாத் தந்தி

மனிதனுடைய காதுகேட்குந்தூரம் கொஞ்சமேயாயினும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் நடக்கின்ற செய்திகளைத் தந்தியின் மூலமாய்க் கேட்கின்றான். அன்றியும், இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் பாடப்படுகின்ற பாடல்களையும் செய்யப்படுகின்ற

பிரசங்கங்களையும் கேட்பதற்கு ஒலிப் பரப்புங் கருவியை உண்டாக்கியிருக்கிறான். இது ஒரு ஆச்சரியமல்லவா?




புகைக்கப்பல்

மனிதனுடைய தேகபலம் சிறிதேயாயினும் பத்தாயிரம், இருபதினாயிரம் குதிரைகள் பலங்கொண்ட இயந்திரங்களை அவன் செய்கிறான். கடலிற் செல்கின்ற புகைக் கப்பல்களும், நிலத்தில் ஓடுகின்ற ரயில் வண்டிகளும் எவ்வளவு பாரத்தைத் தூக்கிச் செல்கின்றன! ஒரு மணிக்



ஆகாய விமானம்

குப் பத்துமைல் ஓடுவது அரிதேயாயினும், மணி ஒன்றுக்கு இருநூறுமைல் வேகத்தில் செல்கின்ற மோட்டார் வண்டி, ஆகாயவிமானம் முதலியவற்றை இவன் ஆளக்கூடியவனாக இருக்கின்றான். இங்ஙனம், காண்பதிலும், கேட்பதிலும், பலத்திலும், வேகத்திலும் மனிதன் பறவைகளையும், விலங்குகளையும்விடத் தாழ்ந்தவனேயாயினும், அறிவின் வலிமையினால் அவற்றைவிட அவன் மிகச் சிறந்தவனாகின்றான். அறிவு தெய்வத்தன்மையுடையது.

பிள்ளைகளே! நீங்கள் சிறுவயதிலேயே அறிவைத் தேடிக்கொள்ள முயலுங்கள். அறிவுடையவன் எல்லாராலும் மதிக்கப்படுவான்.

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்." (திருக்குறள்)

## குறிப்புகளும் வினாக்களும்

பறவைகளில் பருந்து, கழுகு, கூளி முதலியவைகள் மாமிச பக்ஷிணிகள்.

கிளி, குயில், புறா முதலியவைகள் சாக பக்ஷிணிகள்.

[சாகம் என்பது காய், கனி, தானியம் முதலிய உணவுப் பொருள்கள்.]

ஆடு, மாடு, குதிரை, யானை முதலியவைகள் சாக பக்ஷிணிகள்.

சிங்கம், சிறுத்தை, புலி முதலியவைகள் மாமிச பக்ஷிணிகள்.

தூரதிருஷ்டிக்கண்ணாடி, தூரத்திலுள்ள பொருள்களைப் பார்வைக்கு எட்டச்செய்யும் கண்ணாடி.

திருஷ்டி = பார்வை

என்னுடையரேனு மிலர் = எதையுடையவர்களானாலும் இல்லாதவர்களே.

## 4. மரணத்தைக் கொல்ல முயன்ற மூடர்கள்

மருதூர் என்ற ஊரிலுள்ள சத்திரத்தின் திண்ணையில் ஒருநாள் அறிவில்லாத மூன்று வாலிபர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியாகப் பறையடித்துக்கொண்டுபோன சத்தங் கேட்டு அம்மூவரும் எழுந்து வெளியேவந்து, சில ஜனங்கள் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு போகிறதைப் பார்த்தார்கள். அவர்களில் ஒரு மனிதனைக் கூப்பிட்டு, "யார் இறந்துவிட்டது?" என்று மூவரும் கேட்டார்கள்.

அதற்கு அம்மனிதன், "இவ்வூரில் நெடுநாளாக ஒரு கிழவர் இருந்தார்; நேற்றிரவு திடீரென்று இறந்துவிட்டார்; அவரைப் புதைப்பதற்குச் சுடுகாட்டிற்குத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்" என்றான். வாலிபர்கள், "அந்தக் கிழவரைக் கொன்றவன் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதன், "இவ்வுலகத்தில் மரணம் என்ற பெயரையுடைய ஒருவனிருக்கிறான்; அவன்தான் எல்லா உயிர்களையும் கொண்டுபோகிறவன்; அவன் வருவதும் போவதும் யாருக்குந் தெரியாது; அவன் நல்லவர்களென்றும் கெட்டவர்களென்றும் பார்க்கமாட்டான்; பணக்காரர்களென்றும் ஏழைகளென்றும் நினைக்கமாட்டான்; இளையவரென்றுங் கிழவரென்றும் எண்ணமாட்டான். எல்லா உயிர்களையுங் கொண்டுபோய்விடுவான். அவனை வெல்லுதற்கு யாராலுமாகாது. அந்தப் பொல்லாதவனே, நேற்றிரவு தூங்கிக்கொண்டிருந்த கிழவருயிரையுங் கொண்டுபோய்விட்டான்" என்றான்.

இதைக் கேட்ட வாலிபர்களில் ஒருவன், "ஓஹோ, மரணமா? நான் அவனுடைய கொடுமைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் சில நாட்களாக இந்த

ஊரில் அநேக ஆண்களையும் பெண்களையுங் கொன்று கொண்டே வருகிறான்" என்றான்.

இதனைக் கேட்ட மற்றொரு வாலிபன், மற்ற இரண்டு பேரையும் பார்த்து, "நண்பர்களே! அப்படிப்பட்ட பொல்லாத கொடியவனை இவ்வுலகத்திலேயே இல்லாத படி செய்துவிடவேண்டும். வாருங்கள், அவனைத் தேடிப் பிடித்துக்கொல்லலாம்" என்றான்.

உடனே மூன்று மூடர்களும் ஒன்றாகப் புறப்பட்டு மரணத்தைத் தேடிக்கொண்டு போனார்கள். சிறிது தூரம் போனபிறகு, எதிரில் தலை நரைத்து உடல் தளர்ந்த ஒரு கிழவர் முக்காடிட்டுக்கொண்டு, தள்ளாடித் தண்டூன்றி நடந்து வந்தார். அவரைக் கண்ட வாலிபரில் ஒருவன், "கிழவா! நீ ஏன் முக்காடுபோட்டுக் கொண்டு வருகிறாய்? இவ்வளவு வயதாகியும் ஏன் செத்துப்போகாமலிருக்கிறாய்?" என்று அதிகாரத்துடன் கேட்டான். கிழவர் தள்ளாடிக்கொண்டே, "அப்பா! மரணம் வந்து என் உயிரைக் கொண்டுபோகவில்லையே. அவன் எப்பொழுது வருவானோ என்று காத்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய கிழத்தனத்தை எடுத்துக் கொண்டு, தங்களுடைய இளம் பருவத்தைக் கொடுப்பவர்கள் ஒருவரும் இல்லாதபடியால் அவன் வருமட்டும் பொறுமையாகக் காத்திருக்கிறேன்" என்றார்.

இளைஞர் மூவரும் கிழவர் பேச்சைக் கேட்டு, "எங்கே பார்த்தாலும் மரணத்தைப்பற்றிய பேச்சாகவே யிருக்கிறது" என்று சொல்லி நகைத்து, மறுபடியுங் கிழவரைப் பார்த்து, "ஐயா! தினந்தோறும் அநேக மக்களைக் கொல்லுகின்ற மரணத்தைத் தேடிப் பிடித்துக் கொல்லுதற்காகவே நாங்கள் புறப்பட்டுப் போகிறோம். அவன் எங்கே இருக்கிறான்? உமக்குத் தெரியுமானால் சொல்லும்"

என்று கேட்டார்கள். கிழவர் முக்காட்டை நீக்கி, அவர்களை விழித்துப் பார்த்து, "இதோ தெரிகின்ற இச்சிறு வழியைத் தொடர்ந்துபோனால் எதிரில் ஒரு தோப்புத் தெரியும். அத்தோப்பில் ஓங்கி வளர்ந்திருக்கின்ற தேக்கு மரம் ஒன்றிருக்கிறது. அம்மரத்தடியில் இரண்டு நாழிகைக்குமுன் நான் அந்த மரணத்தைப் பார்த்தேன்; இப்பொழுதும் அங்கேதானிருப்பான் என்று நினைக்கிறேன்; நீங்கள் மூவரும் விரைவாகப் போனால், அவனை அம்மரத்தடியில் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பிறகு, அறிவில்லாத அம்மூன்று இளைஞரும் கிழவர் சொன்ன வழியே ஓடித் தோப்பை அடைந்தார்கள். அந்தத் தோப்பை யடைந்த மூன்று வாலிபர்களும் கிழவர் சொன்ன தேக்கு மரம் எங்கே இருக்கிறதென்று பார்த்துக்கொண்டே விரைவாக ஓடி, அம்மரத்தடியைச் சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் பொன், வெள்ளி நாணயங்கள் குவியல் குவியலாகக் கிடக்கக்கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இனிமேல் தங்கள் ஆயுள் காலம் வரையில் யாதொரு குறையுமில்லாமல் இன்பமாகக் காலங்கழிக்கலாமென்று பேசி மகிழ்ந்தார்கள். அந்தப் பொன் வெள்ளி நாணயங்களைக் கைகளில் அள்ளி அள்ளிப் பார்த்துக் களிப்படைந்தார்கள். பணத்தைக் கண்டவுடன் மரணத்தைத் தேடிப்போகவேண்டுமென்ற எண்ணம் அவர்கள் மனத்தைவிட்டு ஓடிவிட்டது. பணத்தைக் கண்ட பெரு மகிழ்ச்சி சற்று அடங்கியவுடன், இப்பணக்குவியலைத் தங்களுடைய வீட்டிற்கு எப்படிக் கொண்டுபோய்ச் சேர்ப்பதென்று ஆலோசித்தார்கள்.

அப்பொழுது ஒருவன், "இப்பணக்குவியலை வாரிக் கொண்டு நாம் பகலில் போகக்கூடாது. போகும்போது

யாராவது பார்த்துவிட்டால் திருடர்களென்று நினைத்து நம்மைப் பிடித்துக்கொள்வார்கள். ஆதலால், சூரியன் மறைந்து இருட்டாகும் வரையில் நாம் இங்கே காத்துக் கொண்டிருப்பதே நல்லது" என்று சொன்னான்.

இதைக் கேட்ட மற்றொருவன், "ஆம், நீ சொல்வது சரிதான். நாமிங்கே காத்திருந்தால் நமக்கு உண்ண உணவும், குடிக்கத் தண்ணீருங் கொண்டுவந்து கொடுப்பவர்கள் யார்? நமக்குள் யாராவது ஒருவர்தான் கொண்டு வரவேண்டும். அதுவரையில் இரண்டுபேரும் இங்கே காத்துக்கொண்டிருக்கவேண்டும். யார் உணவு கொண்டு வரப்போகிற தென்பதைச் சீட்டுப் போட்டுப் பார்த்து நிச்சயம் செய்துகொள்ளவேண்டும்" என்றான்.

மூன்று பேரும் அதற்குச் சம்மதித்துச் சீட்டுப் போட்டார்கள். சீட்டு மூவரில் இளையவனுக்கு விழுந்தது. உடனே, அவ்விளைஞன் உணவும் பானமுங்கொண்டு வர ஊரை நோக்கி விரைந்து சென்றான். அவன் கண்ணுக்கு மறைவாகப் போனபிறகு, பணக் குவியலைக் காத்துக்கொண்டிருந்த இரண்டுபேரும், உணவு கொண்டு வரப்போனவனைக் கொன்றுவிட்டால், அப்பணத்தைத் தாங்களிருவருமே பங்கிட்டுக்கொள்ளலாமென்று நெடு நேரம் யோசித்து, அவன் திரும்பி வந்தவுடன் அவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிடவேண்டியது என்று முடிவு செய்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இவ்வாறிருக்க, ஊருக்குப்போன இளைஞன் தான் போகும்போதே பலவிதமான தீய எண்ணங்களை எண்ணிக்கொண்டே நடந்தான். "இந்தப் பணக்குவியலை இவர்களுக்குக் கொடாமல் நான் மாத்திரம் அனுபவிப்பதாயிருந்தால் எவ்வளவோ சுகமாக வாழ்வேன். ஒருவிதமான குறைவும் எனக்கு வராது. என்னைப் போல் இன்பமாக வாழக்கூடியவர்களும் இருக்கமாட்

டார்கள் என்றே நினைக்கிறேன்; எப்படியாவது இப் பொருள் முழுவதையும் நானே அடையும்படியான வழி தேடுவேன்'' என்று தனக்குள் பேசிக்கொண்டே ஊரை யடைந்தான். பிறகு அவன் மூன்று பேர் உண்ணக்கூடிய சாப்பாடும், மூன்று குப்பிச் சாராயமும் வாங்கினான். பின் மருந்துக் கடைக்குப்போய், பொல்லாத விஷம் ஒன்றை வாங்கினான். அதை இரண்டு சாராயக் குப்பி களிற் கலந்து அடையாளம் வைத்துக்கொண்டான். அப்புறம் அவன் உணவையும் சாராயக் குப்பிகளையும் எடுத்துக்கொண்டு விரைவாகப் போய்ப் பணக்குவியல் உள்ள இடத்தை அடைந்தான்.

பணக்குவியலைக் காத்துக்கொண்டிருந்த இருவரும் இளைஞனைக் கண்டவுடன் அவன்மேற் பாய்ந்து கத்தி யால் குத்திக் கொன்றுவிட்டார்கள். பிறகு அவ்விரு வரும் இளைஞன் கொண்டுவந்த உணவை யருந்தி விஷங் கலந்த இரண்டு குப்பிச் சாராயத்தையும் குடித்தார்கள். உடனே மயக்கமடைந்து கீழே விழுந்து இறந்தார்கள். இவ்விதமாக மூன்று மூடர்களும் நம்பிக்கைத்துரோகம் செய்ய நினைத்ததனால் மாண்டுபோனார்கள்.

"அம்மூவரும் மரத்தடியில் மரணத்தைக் கண்டார் கள்'' என்று சொல்வது உண்மையல்லவா?

### குறிப்புகளும் வினாக்களும்

| | | | | |
|---|---|---|---|---|
| பேசி | + | கொண்டு | = | பேசிக்கொண்டு |
| அடித்து | + | கொண்டு | = | அடித்துக்கொண்டு |
| தூக்கி | + | கொண்டு | = | தூக்கிக்கொண்டு |
| நடந்து | + | கொண்டு | = | நடந்துகொண்டு |
| தின்று | + | கொண்டு | = | தின்றுகொண்டு |
| வந்து | + | கொண்டு | = | வந்துகொண்டு |
| கொன்று | + | கொண்டு | = | கொன்றுகொண்டு |

இவற்றை யுற்று நோக்கி எவ்விடத்தில் க, ச, த, ப என்ற எழுத் துக்கள் மிகும், எவ்விடத்தில் மிகா என்பதை யறிந்துகொள்ளுங்கள்.

இப்பாடத்தில் பொன் வெள்ளி நாணயங்கள் குவியல் குவியலாகக் கிடந்ததைப்பற்றிச் சொல்லியுள்ளது. பொன் நாணயத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நமது நாட்டில் இப்பொழுது பொன் நாணயம் உபயோகத்தில் இல்லை. நகைகள் செய்வதற்கு சவரன் என்ற நாணயத்தை வாங்குகின்றூர்கள். சவரனுக்குப் பவுன் என்றும் பெயர். சவரன் என்ற சொல் ஆங்கில மொழியாகிய Sovereign என்பதன் திரிபு. பவுன் என்ற சொல் ஆங்கில மொழியாகிய Pound என்பதன் திரிபு.

வெள்ளி நாணயங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நமது நாட்டில் முக்கியமான வெள்ளி நாணயம், ரூபா அல்லது ரூபாய். இதை ஆங்கிலத்தில் Rupee என்கிறோம். ரூபத்தையுடையது என்பது இதன் பொருள். யாருடைய ரூபம் இதிலிருக்கிறது?

## 5. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

ஒரு பட்டணத்தில் தான் நினைத்தபடி செய்கின்ற ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் தன்னிடத்தில் வழக்குக் கொண்டுவருகின்றவர்களுக்கு நியாயமான தீர்ப்புக்கூறமல் தன் மனத்தில் எண்ணியபடி செய்வான். இப்படிச் செய்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அவன் சிறிதும் கருதமாட்டான். கடவுளைப் பற்றியும் அவனுக்கு அச்சமே கிடையாது.

அந்தப் பட்டணத்தில் ஒரு பெண் தன் கணவனை யிழந்து கைம்பெண் ஆனாள். இவளுக்கு வேறு ஆதரவு ஒருவருமில்லை. ஒரு துஷ்டன், இவளுக்குத் துணை ஒருவருமில்லையென்பதைக் கண்டு, அவளிடமிருந்த பொருளைப் பறித்துக்கொள்ள வகை தேடினான். இதை யறிந்த அந்தப் பெண் என்ன செய்வாள்? பட்டணத்தில் உள்ள நியாயாதிபதியிடம் ஓடித் தன் குறையைச் சொல்லிக் கொண்டாள்.

"ஐயா, கொஞ்ச நாளைக்கு முன் எனது கணவன் இறந்துவிட்டார். துணை எவருமின்றி நான் தன்னந் தனியே இருக்கிறேன். ஒரு துஷ்டன் என்னுடைய சொத்தை அபகரிக்க வழிதேடுகின்றான். திக்கில்லாத நான் தங்களிடத்திலன்றி வேறு யாரிடத்திற் போய் முறையிடுவேன்? எனது குறையைத் தீர்க்கவேண்டும்" என்று வணங்கி அழுது கேட்டுக்கொண்டாள்.

கைம்பெண் செய்த விண்ணப்பத்தை அந்தப் பொல்லாத நியாயாதிபதி கேட்டுப் பேசாமலிருந்து விட்டான். அவள் இரண்டு மூன்றுநாள் பொறுத்துப் பார்த்தாள். நியாயாதிபதி ஒன்றுமே செய்யவில்லை. ஏழைப்பெண் என்ன செய்வாள்? மறுபடியும் நியாயாதிபதியிடத்தில் வந்து தனது பரிதாபமான நிலைமையை எடுத்துக்கூறி யழுதாள். இரண்டாம் முறையும் அந்த நியாயாதிபதி அவளுடைய குறையைக் கேட்டு மனமிரங்கவில்லை. அந்த விதவை மிகவும் மனம் வருந்தித் தன் வீட்டிற்குப் போனாள்.

அவள் வீட்டிற்குச் சென்றபின், "இந்த நீதிபதி கல் நெஞ்சு படைத்தவனா யிருக்கின்றான். என்னுடைய நிலைமையை நான் எவ்வளவுதான் எடுத்துச்சொல்லியும் அவனுடைய மனம் இளகவில்லை. நான் சும்மா இருந்து விடுவேனானால் எனது சொத்தைப் பறித்துக்கொள்ள நினைக்கின்ற பாவி என்ன செய்வானோ? ஆகையால், எப்படியாவது நான் நியாயாதிபதியின் துணையைப் பெற வேண்டும். இன்னும் ஒருமுறை முயன்று பார்ப்பேன்" என்று தீர்மானித்துக்கொண்டாள். அடுத்தநாள் அவள் திரும்பவும் நியாயாதிபதியின் வாயிலிற் காத்திருந்தாள். அவனோ அவளை ஏறெடுத்துப் பார்க்காமலே போய் விட்டான். இது கண்ட அந்தக் கைம்பெண், ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் நியாயாதிபதியினிடத்

தில் வந்து முறையிடத் தொடங்கினாள். என்ன கடுஞ் சொற் கூறினாலும் அவள் அவனை விடவேயில்லை. நியாயாதிபதிக்கு இது ஒரு பெரிய உபத்திரவமாகிவிட்டது. "இந்தத் தொல்லை நீங்கினால் போதும்" என்று அவன் நினைத்து, அவளைக் கூப்பிட்டு, அவள் வேண்டிக்கொண்டபடியே செய்தான். அதுமுதல் கைம்பெண் கவலை நீங்கிச் சுகமாக வாழ்ந்தாள்.

கல்நெஞ்சு படைத்தவனும் நீதிசெய்ய மறுப்பவனுமாகிய ஒரு சாதாரண மனிதன், தன்னை அடிக்கடி வந்து வேண்டிக்கொண்ட ஒரு கைம்பெண்ணின் குறையைத் தீர்க்க உடன்பட்டான். தம்மை நோக்கி இடைவிடாது வேண்டிக்கொள்ளும் அடியவர்களுக்கு இறைவன் செவி கொடாதிருப்பாரோ?

## குறிப்புகளும் வினாக்களும்

வழக்கு + கொண்டு வருகின்றவர்கள் = வழக்குக் கொண்டு வருகின்றவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| தீர்ப்பு | + | கூறாமல் | = | தீர்ப்புக்கூறாமல் |
| கேட்டு | + | கொண்டாள் | = | கேட்டுக்கொண்டாள் |
| பொறுத்து | + | பார்த்தாள் | = | பொறுத்துப் பார்த்தாள் |
| எடுத்து | + | சொல்லி | = | எடுத்துச் சொல்லி |

முயற்சி, ஊக்கம், தாளாண்மை முதலிய சொற்கள் ஏறக்குறைய ஒரே பொருளைக் குறிப்பன. நாமெடுத்துக்கொள்ளும் வேலையாதாயினும் அதை முடிப்பதற்குமுன் தடைகள் வருவது இயற்கையே. தடைகளைக் கண்டு அஞ்சி நின்றுவிடுதல் கோழைத்தனம். தடைகளை மேற்கொள்ளுவதே ஆண்மையாகும். இதற்கு முயற்சி வேண்டுமல்லவா? படிப்பதிலும் கஷ்டங்கள் உண்டு. கஷ்டங் கண்டு ஒடுங்காமல் ஊக்கத்துடன் மேலேறவேண்டும். இடைவிடாத முயற்சியால் எல்லாவற்றையும் நாம் சாதிக்கலாம்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

## 6. மரங்கள்

மரம், செடி, கொடி, புல் முதலியவை இல்லாவிட்டால் நாம் வசிக்கின்ற இந்த வையகம் பார்ப்பதற்கு அழகாயிராது; இதுமாத்திரமன்று, மரம், செடி, கொடி முதலியன இல்லாவிட்டால், ஆடு, மாடு, குதிரை, மான் முதலிய மிருகங்கள் வாழமுடியாது. ஆடு, மாடு, யானை, குதிரை முதலியன இல்லாவிட்டால், சிங்கம், புலி, சிறுத்தை முதலிய கொன்றுதின்னும் விலங்குகளும் இரா. இதிலிருந்து தாவரவர்க்கத்தின் இன்றியமையாமையை நாமறிந்துகொள்ளலாம்.

மரம், செடி, கொடி, புல் முதலியவை உலகத்தில் அற்றுப்போனால் மிருகங்கள் உயிரோடு இருக்க முடியாதென்று பார்த்தோம். மனிதர்களைப்பற்றி நாம் யோசிக்கவில்லை. தாவரவர்க்கமின்றி மனிதர்களும் வாழமுடியாது. காரணம் என்னவென்றால், மனிதர்களுக்கு உணவாகின்ற கோதுமை, நெல், கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்கள் தாவரவர்க்கத்திலிருந்தே கிடைக்கின்றன. ஆகையால், தாவரவர்க்கம் ஒழிந்து போனால் மனிதர்களும் அழிந்துவிடுவார்கள்.

இந்தப்பாடத்தில் செடி, கொடி, புல் ஆகிய இவற்றை விலக்கி மரங்களைமாத்திரம் கவனிப்போம். மரங்களால் நாம் பெறும் பயன்கள் எவை? அவை நமக்கு நிழல் தருகின்றன. இந்தியாவைப்போன்ற சூடான நாட்டில் நமக்கு நிழல் அவசியம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. சாலையோரங்களில் ஆல், அரசு, அத்தி, புளி, இருப்பை (இலுப்பை), வேம்பு முதலிய மரங்கள் தளிர்த்து வளர்ந்து நமக்கு இன்பமூட்டுகின்றன. வெயிற்காலத்தில் தென்றற்காற்று வீசும்போது மரநிழலில் அமர்வது எவ்வளவு இன்பத்தை அளிக்கின்றது! கஷ்டங்களும்



மரங்கள் செடி கொடிகள் அளிக்கும் இன்பமான தோற்றம்

கவலைகளும் நிறைந்த இவ்வுலக வாழ்வாகிய வெயிலில் அலைகின்ற மக்களுக்கு இறைவன் செய்கின்ற கருணையை நினைத்து, "கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே" என்று ஒரு புலவர் கூறியுள்ளார். இங்ஙனம், வெப்பமிகுந்த நாடுகளில் வசிக்கின்றவர்களுக்கு மரங்கள் நிழலைத் தந்து உதவுவதுபோல் குளிர் மிகுந்த நாடுகளில் வசிப்பவர்களுக்கு அனலையுந் தருகின்றன. வெயிலில் நாம் குளிர்ச்சியை நாடுவதுபோல், குளிர்நாடுகளில் இருப்பவர்கள் வெப்பத்தை விரும்புகின்றார்கள். அவர்கள் நெருப்பருகே யமர்ந்து குளிரைப் போக்கிக்கொள்ளுகின்றார்கள். நெருப்புண்டாக்குவதற்கு விறகு வேண்டுமல்லவா? சீத மிகுந்த நாடுகளில் நெருப்புண்டாக்குவதற்கு மரத்திலிருந்து கிடைக்கும் விறகே யன்றி, நிலக்கரியும் பயன்படுகின்றது. நிலக்கரியை நீங்கள் பார்த்திருப்பீர்கள்; புகைவண்டியில் நீரை ஆவியாக மாற்றுவதற்கு அதை உபயோகிக்கிறார்கள். நிலக்கரி என்பது யாது? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் செழித்து வளர்ந்து மண்ணால் மூடப்பட்டு மறைந்த



நிலக்கரி சுரங்கத்திற்குள் வேலை செய்தல்

பெரிய காடுகளே நிலக்கரிச் சுரங்கங்களாகும். ஆகையால், நிலக்கரியும் மரமே என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

நாம் ஒவ்வொருநாளும் உண்கின்ற உணவை விறகு கொண்டே சமைக்கிறோம். இப்படி, நாள்தோறும் நடக்கும் நமது வாழ்க்கைக்கு மரங்கள் பெரிதும் பயன் படுகின்றன.

நிலக்கரியினுதவியால் புகைவண்டிகள் ஓடுகின்றன. கடலிற் செல்லும் கப்பல்களில் அநேகம் நிலக்கரியினுதவியாலேயே செல்கின்றன. இப்படியே நீரை பூமிக்குள்ளிருந்து மேலே கொண்டுவரும் இயந்திரங்களும், வேறு பல தொழில்கள் செய்யும் இயந்திரங்களும் நிலக்கரியால் ஓட்டப்படுகின்றன. இம்மட்டோ?

நாம் அமருகின்ற நாற்காலிகளும், துயில்கின்ற கட்டில்களும், நாம் படிக்கப் பயன்படுகின்ற மேஜைகளும், பீரோ, அலமாரி, பெட்டிகளும், சமைக்கப் பயன்படும் அகப்பை, மத்து, நெருப்புப்பெட்டி, நெருப்புக்குச்சி, தட்டு, விளக்குத்தண்டு, வீடுகட்டப் பயன்படும் தூலம், கழி, மூங்கில், தூண் முதலியனவும் மரங்களாற் செய்யப் படுவனவேயாகும். நமது பிரயாணத்திற்கு வசதிப்படும் ஒற்றைமாட்டு வண்டி, இரட்டைமாட்டு வண்டி, புகை வண்டி, மின்சார வண்டி முதலியவைகளும் வெகுவாய் மரத்தாலானவையே.

நமது மெத்தைகள், தலையணைகள் இவற்றிற்குள்ளிருப்ப தென்ன? பெரும்பாலும் பஞ்சுதானே! இது இலவமரத்திலிருந்து எடுக்கப்படுவது. "இலவம் பஞ்சிற் றுயில்" என்று நீங்கள் படித்திருக்கலாம். நமது ஆடைகள் பெரும்பாலும் பருத்திச்செடியிலிருந்து எடுக்கப்படும் பஞ்சுகொண்டு நெய்யப்படுகின்றன.

நாம் செவியாரக் கேட்டு மகிழ்கின்ற இனிய ஓசைகள் எங்கிருந்து வருகின்றன? புல்லாங்குழல், நாதஸ்வரம், யாழ், வீணை, பிடில், மத்தளம் முதலிய இசைக்கருவிகளும் மரத்தால் செய்யப்படுகின்றன.

பூ நிறைந்த மரங்கள் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கின்றன! பூவில் நிறங்களுடன் மணமுமிருந்தால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றோம்! மகிழம்பூ முதலிய பூக்கள் நமக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகின்றன.

சந்தனமரம் தென்னாட்டிலுள்ள நமக்குப் பண்டைநாள் முதற்கொண்டே இன்பத்தைக்கொடுத்துக்கொண்டு வருகிற மரமாகும். தமிழ்நாட்டில் திருமணம் முதலிய நன்மைகளுக்குச் சந்தனம் வழங்குகின்றோம்.

மாங்காய், முருங்கைக்காய், வாழைக்காய், தேங்காய், பலாக்காய், எலுமிச்சை, நாரத்தை, ஆரஞ்சு, வாதுமை, பேரிக்காய், முந்திரி, பாக்கு முதலியவைகளை மரங்கள் நமக்குத் தந்துதவுகின்றன.

இத்தனையுமன்றி மக்களுக்கு வரும் பிணி தீர்ப்பதற்கு உபயோகப்படும் மருந்துகளும் மரங்களிலிருந்து தோன்றுகின்றன. கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வில்வக்காய் முதலிய காய்களும், அரசு, ஆல், அத்தி முதலியவைகளின் வித்துக்களும், பட்டைகளும், வேர்களும் பயன்படுகின்றன.

முன் காலத்திலிருந்தவர்களுக்கு படிப்பதற்கும் எழுதுவதற்கும் பனைமரத்தின் ஓலைகள் மிகவும் பயன்பட்டன. பனைமரமில்லாதிருந்தால் அக்காலத்திலிருந்தவர்கள் படிப்பதற்கும் எழுதுவதற்கும் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள். முன்காலத்தில் பனை ஓலைகளில் எழுதிவைத்திருந்த சுவடிகளில் பல இப்பொழுது அச்சேறியிருக்கின்றன. இப்போதும் சில விடங்களில் பனை ஓலைகளில் எழுத்தாணியால் எழுதுகிறார்கள். நாம் எழுதுவதற்கும் படிப்பதற்கும் பயன்படும் தாளும் (காகிதம்) மரத்தால் செய்யப்படுவதே.

இன்னும் மரங்களைப்பற்றி நாமறியவேண்டியது என்னவென்றால், மரங்கள் மழை பெய்வதற்குக் காரண

மாயிருக்கின்றன. மரங்களடர்ந்துள்ள காடுகளை யடுத்த இடங்களிலெல்லாம் மழை அதிகமாகப் பெய்கின்றது. இப்படி மேலிருக்கும் மேகத்தை இழுத்து மழை பெய்விப்பதுடன், நிலத்திற்குள்ளிருக்கும் நீரையும், மரங்கள் வேர்கள் மூலமாய் மேலே கொண்டுவருகின்றன. இக்காரணத்தால் மரங்கள் நிறைந்த விடங்களில் ஊற்றுநீர் ஓடுவதைப் பார்க்கலாம். எல்லாவற்றிலும் மிகவும் மேலான உதவி ஒன்று மரங்கள் செய்கின்றன. அது என்னவென்றால், அவைகள் நாம் வெளிவிடும் நஞ்சு கலந்த காற்றை யுட்கொண்டு அதைத் தூய்மைப்படுத்தி நமக்குத் தருகின்றன. இத்தொழிலை இவைகள் செய்யாவிட்டால் நாம் உயிருடன் வாழ முடியாது.

பிள்ளைகளே! மரங்கள் நமக்குச் செய்கின்ற நன்மைகளை யறிந்தபின், நாம் அவற்றிற்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆதலின், நீங்கள் வளருகின்ற மரங்களுக்குத் தீங்கு செய்தலாகாது. தீங்கு செய்கின்றவர்களைக் கண்டால் அவர்களை நீங்கள் தடுக்க வேண்டும். பல காரணங்களால் மரங்கள் வெட்டப்படுவது அவசியமாகின்றது. ஆனால், மரத்தை வெட்டுகின்றவர்கள், வெட்டுகின்ற மரத்திற்குப் பதிலாக வேறு மரங்களை வைத்து வளர்ப்பதில்லை. உங்களால் கூடுமானால் ஏற்ற விடங்களில் மரங்களை வளர்க்க முயற்சி செய்யுங்கள்.

## குறிப்புகளும் வினாக்களும்

இந்தியாவை + போன்ற = இந்தியாவைப்போன்ற
நிழலை + தந்து = நிழலைத்தந்து
குளிரை + போக்கிக்கொள்ளுகிறார்கள் = குளிரைப் போக்கிக்கொள்ளுகிறார்கள்.

இன்பத்தை + தருகின்றன = இன்பத்தைத் தருகின்றன
மரங்களை + பற்றி = மரங்களைப்பற்றி
ஓடுவதை + பற்றி = ஓடுவதைப்பற்றி
அதை + தூய்மைப்படுத்தி = அதைத் தூய்மைப்படுத்தி
தீங்கு செய்கின்றவர்களை + கண்டால் = தீங்கு செய்கின்றவர்களைக் கண்டால்

இரண்டாம் வேற்றுமை உருபு நிலைமொழியிலிருக்க, வருமொழி முதலில் க, ச, த, பக்கள் வந்தால் அவை மிகும்.

---

## 7. பள்ளி போகாப் பரஞ்சோதி

சித்திரை மாதத்தில் கொடிய வெயில் காய்ந்த ஒரு நாள், பரஞ்சோதி என்ற சிறுவன் மத்தியானம் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போனான். போகிற வழியிலே இருபுறமும் ஆலமரங்களும் அரச மரங்களும் வரிசை வரிசையாக வளர்ந்து நின்றன. அவற்றின் குளிர்ந்த நிழலில் மாடுகள் படுத்து அசை போட்டுக்கொண்டிருந்தன. ஒரு எருமை மாட்டின் கொம்பின்மேல் காக்கை ஒன்று உட்கார்ந்து 'கா, கா' என்று கத்தினது. ஒரு பெரிய அரசமரத்தடியில் சில ஆண்களும் பெண்களும் அயர்ந்து நித்திரை செய்தார்கள். வெயிலில் நடந்துவந்த பரஞ்சோதி, மாடுகளும் மனிதர்களும் நிழலில் சுகமாகப் படுத்திருப்பதைப் பார்த்து, "நான் என் பள்ளிக்கூடம் போகவேண்டும்; நானும் என் இந்த அரசமரத்து நிழலில் படுத்து உறங்கக் கூடாது?" என்று நினைத்தான்.

இந்த எண்ணம் வந்தவுடனே அவன் பள்ளிக்குப் போகாமல் ஓர் அரசமரத்தின் கீழே சென்று புத்தகத்தைத் தலைக்குக் கீழே வைத்துப் படுத்துக்கொண்டான். சூரியனுடைய வெளிச்சம் இலைகளின் வழியே வந்து சிறு

சிறு வட்டங்களாய் அவன்மேல் விழுந்தது. கொஞ்ச நேரமான பிறகு படுத்திருப்பது அவனுக்குச் சுகமாகத் தெரியவில்லை. "என்னோடு விளையாடுவதற்கு யாராவது இருந்தால் நன்றாக இருக்கும்" என்று அவன் நினைத்தான். விளையாட ஒருவரும் அங்கே இல்லை. சில குரங்குகள் ஓர் ஆலமரத்தில் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கீச், கீச் சென்று கூச்சலிட்டன. அவைகளின் மீது பரஞ்சோதி கற்களை விட்டு எறிந்தான். அப்பொழுது ஒரு பெரிய ஆண் குரங்கு மரத்திலிருந்து கீழே இறங்கிப் பரஞ்சோதிக்கு நேராகக் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி விழித்துக்கொண்டுவந்து உறுமினது. அவன் அந்த இடத்தைவிட்டு ஓடிப்போனான்.

சற்று தூரத்திற்கப்பால் தெளிந்த நீர் நிறைந்த ஒரு குளமிருந்தது. அதில் சிலர் குளித்தார்கள். "இந்த வெயிலில் தண்ணீரில் குளித்தால் நன்றாக இருக்கும்" என்ற நினைவுடன் பரஞ்சோதி தன் ஆடைகளைக் களைந்து கரையில் வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கினான். அங்கே அவன் தண்ணீரைக் கைகளால் அடித்துக் குதித்து விளையாடினான். இப்படி விளையாடிக்கொண்டே அவன் கழுத்தளவு தண்ணீர்மட்டும் போனான். அதனோடு அவன் நின்றானா? இல்லை. இன்னும் ஓரடி எடுத்து அப்புறம் போனான். தண்ணீர் அவன் தலைக்குமேல் வந்துவிட்டது. பரஞ்சோதி மேலே குதித்துக்குதித்து மூச்சுப்பிடித்தான். குளத்தில் குளித்துக்கொண்டிருந்த ஒருவர் பாய்ந்து வந்து பரஞ்சோதியின் மயிரைப் பிடித்து இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து தாடையில் ஓரறை கொடுத்தார். அந்த அடியை வாங்கிக்கொண்ட பரஞ்சோதி ஒன்றும் பேசாமல் ஆடைகளை எடுத்து அவசரமாய் அணிந்துகொண்டு அவ்விடம் விட்டு ஓடிப்போனான்.

குளத்திற்கருகில் ஒரு மாந்தோப்பிருந்தது. தோப்பின் அருகே ஒரு ஒற்றை மாட்டுவண்டி நின்றது. வண்டியில் ஒருவருமில்லை. சிறிதுநேரம் பரஞ்சோதி வண்டியையும் மாட்டையும் நின்று பார்த்தான். "இந்த வண்டியில் ஏறி மாட்டை ஓட்டிப்பார்க்கலாம்" என்று அவன் நினைத்தான். வண்டியின் முன்புறமாக ஏற அஞ்சி அவன் பின்புறமாக ஏறினான். உடனே மாடு ஓட ஆரம்பித்தது. வண்டியின் கூண்டில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து மாட்டை நிறுத்த அவன் முயன்றான். அவனால் அதை நிறுத்தக் கூடவில்லை. அது நாற்கால் பாய்ச்சலில் ஓடினது. என்ன செய்வான் பரஞ்சோதி? வழியிலே நெல்மூட்டைகளேற்றிய இரட்டைமாட்டு வண்டி ஒன்று எதிரே வந்தது. அந்த வண்டிக்காரன் மூட்டைகள் மேல் சாய்ந்து நின்று

மண்ணை நம்பி மரமிருக்க ஏலேலோ
மரத்தை நம்பிக் கிளையிருக்க ,,
கிளையை நம்பி இலையிருக்க ,,
இலையை நம்பிப் பூவிருக்க ,,
பூவை நம்பிக் காயிருக்க ,,
காயை நம்பிக் கனியிருக்க ,, என்று

பாடிக்கொண்டு வந்தான். அப்பொழுது எதிரே நாற்கால் பாய்ச்சலில் ஓடிவந்த ஒற்றைமாட்டு வண்டியைப் பார்த்து அவன் விழித்தான். பரஞ்சோதி உள்ளிருந்து கொண்டு, "ஐயா, ஐயா, இந்த மாட்டை நிறுத்து, நிறுத்து," என்று கூச்சலிட்டான். வண்டிக்காரன் தன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி வருவதற்குள், பரஞ்சோதி இருந்த ஒற்றைமாட்டு வண்டி பளிச்சென்று அப்பாலே சென்றது. பரஞ்சோதியின் பரிதாபமான நிலையைக் கண்டு வண்டிக்காரன் சிறிது வருந்தினான்.

அவனுக்குச் சிரிப்பும் வந்தது. இதற்குள் பரஞ்சோதியின் ஒற்றைமாட்டு வண்டி நெடுந்தூரம் போய்விட்டது.

நல்லகாலமாகப் பரஞ்சோதி ஏறியிருந்த வண்டியிற் கட்டியிருந்த மாடு, பாதையை விட்டு விலகாமல், மரம், கல் முதலியவற்றில் மோதிக்கொள்ளாமல், அவன் முன் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற வழியில் அவனை இழுத்துச் சென்றது. அது சிறிது தூரஞ் சென்ற பிறகு களைத்துப் போனதனால் முன்னினுங் குறைந்த வேகத்துடன் செல்லத்தொடங்கினது. "இன்னுங் கொஞ்சதூரம் சென்றால் இந்த மாடு களைத்துப்போய் மெள்ள நடக்கும், நானிறங்கிவிடுவேன்," என்று பரஞ்சோதி நினைத்தான். ஆனால், இந்த வேளையில் பாதையோரத்தில் நின்ற கழுதையொன்று நீண்ட குரலெடுத்து உரக்கக் கத்தினது. இது கேட்டு மிரண்ட மாடு முன்னினும் வேகமாய்ப் பாய்ந்தது. பாதையில் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்த சிலர் அஞ்சி விலகி நின்றார்கள். பரஞ்சோதி வண்டியின் இருபுறங்களையும் கைகளால் பிடித்துக்கொண்டு கூவினான். இரண்டு மூன்றுபேர் ஓடிவந்து வண்டியை நிறுத்த முயன்றார்கள். அவர்களால் அது முடியவில்லை. மற்றுமிரண்டு மூன்றுபேர் கூடிவந்து வண்டியைப் பிறகே நின்று இழுத்தார்கள். இப்படி முன்னும் பின்னும் பலர் கூடி வண்டியைக் கடைசியாக நிறுத்தினார்கள்.

இதற்குள் பரஞ்சோதியின் பள்ளிக்கூடம் முடிந்து பிள்ளைகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். எல்லோரும் ஒன்றாகத் திரண்டு, அழுதுகொண்டு நின்ற பரஞ்சோதியினிடம் ஓடிவந்தார்கள். வண்டியை நிறுத்தினவர்கள் பரஞ்சோதியை நோக்கி, "நீ எப்படி இந்த வண்டியில் ஏறினாய்? இது யாருடைய வண்டி?" என்று கேட்டார்கள். ஏங்கி அழுதுகொண்டே பரஞ்சோதி

தன்னுடைய செய்கையை எல்லாம் கூறினன். அவனுடைய பள்ளித்தோழர்கள் எல்லாரும் இது கேட்டு விழுந்து, விழுந்து நகைத்தார்கள். பரஞ்சோதிக்கு வெட்கம் வந்து பாடசாலைக்குத் தவருமல் போய்ப் படித்துக் கெட்டிக்காரனுனன்.

## குறிப்புகளும் வினுக்களும்

| | | |
|---|---|---|
| மரத்தை நம்பி | + கிளையிருக்க | = மரத்தை நம்பிக் கிளையிருக்க |
| இலையை நம்பி | + பூவிருக்க | = இலையை நம்பிப் பூவிருக்க |
| பூவை நம்பி | + காயிருக்க | = பூவை நம்பிக் காயிருக்க |
| காயை நம்பி | + கனியிருக்க | = காயை நம்பிக் கனியிருக்க |
| பாடி | + கொண்டு | = ? |

சும்மா நேரத்தைக் கழிக்க நீங்கள் விரும்புகின்றீர்களோ? பரஞ்சோதிக்குச் சும்மாவிருக்க முடிந்ததா? ஒருவரும் சும்மாவிருக்க முடியாது. அப்படிச் செய்யத் துணிபவர்கள் பரஞ்சோதியைப்போல் இடுக்கண்களிலகப்படுவோர்கள்.

நீந்தக் கற்றுக்கொள்ளாமல் நீரிலிறங்குவது ஆபத்துக்கிடமானது. ஆனல், நீரிலிறங்காமல் நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது. இது போலவே இலக்கணமறியாது எழுதுவது கஷ்டம். எழுத்துப் பயிற்சியின்றி இலக்கணமறிய முடியாது.

---

## 8. புலி தேடிச்சென்ற சிறுவன்

நமது நாட்டில் பெரும் புகழ்பெற்ற அறிஞர் பலரில் ஜகதீச சந்திரபோஸ் என்பவருமொருவர். இவர் வங்காள நாட்டைச் சேர்ந்தவர். மரஞ் செடி கொடிகளும் நம்மைப்போல் இன்பதுன்பங்களை யுணரக்கூடியவைகளே என்பதை இவர் யாவருமறிய எடுத்துக் காட்டியிருக்கின்றூர். நமது நாட்டில் மாத்திரமேயன்றி ஐரோப்

பாவிலும், அமெரிக்காவிலும், மற்ற இடங்களிலும் இவருடைய புகழ் பரவியிருக்கிறது. சிறுவயதில் இவர் செய்த நகைப்புக்கிடமான ஒரு விஷயத்தைப் பார்ப்போம்.

ஜகதீச சந்திரபோஸுக்கு வயது ஐந்து அல்லது ஆறு ஆனபொழுது ஒருநாள் அவரிருந்த ஊரைச் சேர்ந்த ஒரு மனிதன் புலியால் தாக்கப்பட்டுக் காயமடைந்



தான். இவ்வாறு தாக்கப்பட்ட அந்த மனிதனைச் சிலர் தூக்கிக்கொண்டு ஊருக்கு வந்தார்கள். நாட்டு வைத்தியர்கள் அவனுக்குச் சிகிச்சை செய்தார்கள். அந்த மனிதன் அடைந்த காயங்களைப்பார்த்து எல்லோரும் மிகவும் மனமிரங்கினார்கள். அவனுடைய தாய்தந்தையர் உறவினர் முதலியவர்கள் சூழநின்று அழுதார்கள். இந்தக் காட்சி ஜகதீசருடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. அவர் இதை மறந்துவிடவில்லை.

சில நாட்களுக்குப்பின் ஜகதீசர் தம்முடைய வீட்டில் ஏதோ ஒரு குறும்பு செய்தார்; அதற்காக அவருடைய அன்னையார் அவரைக் கண்டித்தார்கள். கண்டிப்பதில் அம்மையார் உபயோகித்த வார்த்தைகளால் ஜகதீசருக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. அவர் அழுதுகொண்டே வெளியே சென்றுவிட்டார். அவர் வெளியே சென்றதின் நோக்கம் யாதெனில் எப்படியாவது, தன் அன்னைக்கு வருத்தமுண்டாக்கவேண்டு மென்பதுதான். உடனே அவருக்குப் புலியால் தாக்கப்பட்ட மனிதனின் ஞாபகம் வந்தது. அந்த மனிதன் ஊருக்கருகிலிருந்த ஒரு கருப்பஞ் சோலையில்தான் தாக்கப்பட்டானென்பதும் அவருக்குத் தெரியும். ஆகையால், அந்தச் சோலைக்குத் தானும் போக அவர் துணிந்தார்.

அவர் போகும்பொழுது, "என்னுடைய மனத்தைப் புண்படுத்திய எனது அன்னையின் மனத்தையும் நான் புண்படுத்துவேன். இந்தக் கருப்பஞ்சோலைக்குட்சென்று இங்கிருக்கும் புலியை நான் பிடித்திழுப்பேன். அது என்மேல் பாய்ந்து தாக்கி என்னைப் படுகாயப்படுத்தி விடும். இரத்தம் வடிகின்ற காயங்களுடன் நான் விழுந்து கிடப்பேன். ஊர் ஜனங்கள் வந்து என்னைத் தூக்கிக் கொண்டுபோய் எனது அன்னையின்முன் கிடத்துவார்கள். அப்பொழுது அன்னையும் வீட்டிலுள்ள யாவரும் என்னைச் சூழநின்று அழுது கண்ணீர்விடுவார்கள்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்.

இப்படி எண்ணிய ஜகதீசர் தீவிரமாய் நடந்து கருப்பஞ்சோலையை யணுகினார். அங்கே ஒரு மனிதனாவது அவர் கண்ணிற் படவில்லை. சிறு பிள்ளையாயிருந்த அவருக்கு மக்கள் நடமாட்டமில்லாத ஓரிடத்தில் தனியாயிருப்பது அச்சத்தையுண்டாக்கிற்று. ஆயினும், அவர் தம்மைத்தாமே தைரியப்படுத்திக்கொண்டு தோட்டத்

துட் புகுந்தார். அப்பொழுது ஒரு காற்று இரைந்து கருப்பஞ்சோலையில் வீசியது. அதைக் கேட்டு நடுநடுங்கி ஜகதீசர் அலறி யழுதுகொண்டு வீட்டை நோக்கி வேகமாய் ஓடினர். அலறியழுதுகொண்டு வீட்டிற்கு வரும் பிள்ளையை அன்னையார் கண்டு "என்ன செய்தி? ஏன் அழுகிருய்?" என்று அன்புடன் கேட்டார்கள். ஜகதீசர் பதிலொன்றும் சொல்லாமல் முன்னைவிட அதிகமாய்த் தேம்பித் தேம்பி யழுதார். பிறகு அன்னை அவரை யணைத்து இனிய மொழிகள் கூறி அவருடைய அழுகையை யமர்த்தினர்.

ஒன்றைச் செய்ய நினைப்பது எளிது.
செய்து முடிப்பது அரிது.

## குறிப்புகளும் வினக்களும்

அவனுக்கு + சிகிச்சை செய்தார்கள் = அவனுக்குச் சிகிச்சை செய்தார்கள்.

| | | |
|---|---|---|
| அவருக்கு | + புலியால் | = அவருக்குப் புலியால் |
| தனக்கு | + தானே | = தனக்குத் தானே |
| அவனுக்கு | + கொடுத்தான் | ? |
| ஊருக்கு | + போனன் | ? |

நான்காம் வேற்றுமை உருபுக்குப் பின் க, ச, த, பக்கள் வந்தால் மிகும்.

படத்திற் புலி மனிதனைத் தாக்கப்போவதைப் பாருங்கள். புலி, சிங்கம், சிறுத்தை முதலியவைகள் பதுங்கியிருந்து பாயும். இவைகளெல்லாம் பூனையினத்தைச் சேர்ந்தவை.

# 9. புல்லுண்ணும் மிருகங்கள்

'மரங்கள்' என்ற பாடத்தில், விலங்குகள் இருவகைப் படும் என்று படித்தோம். இவை புல்லுண்ணும் விலங்குகள், புலால் உண்ணும் விலங்குகள் என்பவையாம். புலால் என்பது மாமிசம். இவ்விரண்டு வகைகளுக்குமுள்ள வித்தியாசத்தை இங்கே பார்ப்போம். புல்லுண்ணும் மிருகங்களாகிய யானை, குதிரை, ஒட்டகம், மாடு, கழுதை ஆகிய இவை மனிதர்களுக்கு மிகவும் பயன்படுகின்றன. புலாலுண்ணும் மிருகங்களோ இவைகளைப் போல் அவ்வளவு பயன்படுகின்றவையல்ல. நாயும் பூனையும் புலாலுண்ணும் மிருகங்கள். மக்கள் வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் நாய்கள் அவர்களுக்கு மிகவும் உபயோகப்பட்டிருக்கும். இக்காலத்திலும் அவை வேட்டையாட உதவுகின்றன; தவிர, அவை வீட்டைக் காக்கவும் பயன்படுகின்றன. பூனையின் உதவி யாதெனில் அது வீட்டிலுள்ள பொருள்களைத் திருடித் தின்னும் எலிகளைக் கொல்லுகின்றது. ஆனால், இக்காலத்தில் நாய்களும் பூனைகளும் பெரும்பாலும் ஆசைக்கென்று வளர்க்கும் பிராணிகளாகவே இருக்கின்றன.

புல்லுண்ணும் மிருகங்களில், மற்றெல்லாவற்றையும் விட நமக்கு அதிகப் பிரயோஜனமாயிருப்பது பசுவாகும். அதன் பால் நமக்கு ஆகாரமாகின்றது. இவ்வகையில் பயன்படுகின்ற மற்றொரு மிருகம் எருமையாகும். பாலைவனப் பிரதேசங்களில் வாழ்கின்ற அராபியர் போன்ற மக்களுக்கு ஒட்டகம்



பெரிதும் உபயோகப்படுகின்றது. தண்ணீரில்லாத வனாந்தரங்களில் ஒட்டகத்தைத் தவிர வேறு மிருகங்கள்

பிழைப்பதரிது. இதுவுமன்றிப் பாரமான சுமைகளைத் தூக்கிக்கொண்டு நெடுந்தூரம் போவதில் ஒட்டகத்திற் கிணையான பிராணியே யில்லை.



அது ஒரு நாளைக்கு இருபத்தைந்து மைல் வீதம் மூன்று நாள்வரையில் தண்ணீரே குடியாமல் ஐந்நூறு அல்லது ஆயிரம் ராத்தல் சுமைகளைத் தூக்கிக்கொண்டு செல்லும். இதுபோலவே குளிர் மிகுந்த ஹிமாலயப் பிரதேசங்களில் மலைமேல் பாரங்களைத் தூக்கிக்கொண்டு போவதற்கு மயிரடர்ந்த சடை எருமை உபயோகப்படுகின்றது. பெரிய காடுகளில் வெட்டப்படுகின்ற தேக்கு முதலிய மரங்களை ஏற்றவிடத்திற்குத் தூக்கிக்கொண்டு செல்ல யானைகளைப் பயன்படுத்துகிறார்கள். இந்துக்களுடைய கோவில் உற்சவங்களிலும், இந்திய அரசர் ஊர்வலங்களிலும் காம்பீரமான தோற்றத்தின்பொருட்டு யானைகளை அலங்கரித்துச் செலுத்துகிறார்கள். குதிரையைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். மனிதர் சவாரி செய்வதற்கேற்ற மிருகம் அதுவே. இராணுவத்தில் குதிரைப்படை என்றொரு பகுதியுண்டு.



இப்படைவீரர் குதிரைகள் மேலேறிச் சவாரிசெய்வார்கள்.

ஆடு, நாம் சாதாரணமாய்ப் பார்க்கும் ஒரு பிராணி. ஆடுகளில் பல வகையுண்டு. ஆயினும் பொதுவாக ஆடுகளைச் செம்மறியாடு, வெள்ளாடு என இருபிரிவாக்கலாம். குளிர் நாடுகளில் இவைகளுடைய மயிரைக் கத்தரித்து ஆடைகளாக நெய்கிறார்கள். கம்பளி, சால்வை முதலியவைகளை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? இவை ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்டவை. ஆட்டின் பால் நல்ல உணவாகும். மாமிசம் புசிப்போர் ஆட்டிறைச்சியை விசேஷமாக உண்பர். சில மலைநாடுகளில் ஆடுகளைச் சுமை தூக்கவும் உபயோகிக்கின்றனர். இங்ஙனம் புல்லுண்ணும் மிருகங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

புல்லுண்ணும் மிருகங்களைக் கொம்புள்ளவை, கொம்பில்லாதவை என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கொம்புள்ளவைகளுக்குப் பெரும்பாலும் குளம்பு பிரிந்திருக்கும். ஒட்டகத்திற்கும் பன்றிக்கும் கொம்பில்லாவிட்டாலும் குளம்பு பிரிந்திருக்கும். யானைக்குக் கொம்பில்லை; ஆனால், தந்தமுண்டு. அதன் காலில் குளம்



பென்று சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. ஐந்து நகங்களே காணப்படுகின்றன. சிலவகை மான்களுக்குக் கொம்பு விழுந்து முளைக்கும்.

புல் மேய்கின்ற மிருகங்களுக்குக் கழுத்து நீண்டிருக்கும். இது சிங்கம், புலி, சிறுத்தை முதலியவற்றின் கழுத்தை ஆடு, மாடு, குதிரை, ஒட்டகம் இவற்றின் கழுத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு விளங்கும். குனிந்து நின்று நிலத்திலுள்ள புல்லை மேய்வதற்கு உசிதமாயிருக்கும்பொருட்டு இவைகளுடைய கழுத்துக்கள் நீண்டிருக்கின்றன. ஆப்பிரிக்காவிலுள்ள ஒட்டகச் சிவிங்கி என்ற மிருகத்தின் கழுத்து மிக நீண்டு உயர்ந்திருக்கின்றது. மேலே மரங்களிலுள்ள இலைகளை மேய்வதற்காக இதன் கழுத்து இப்படி வளர்ந்திருக்கின்றன. யானை புல்லுண்பதாயினும் அதன் கழுத்து மிகக் குறுகியதே. அது ஏன்? புல்லுண்பதற்கு அது கழுத்தை வளைக்க வேண்டிய அவசியமேயில்லை. தும்பிக்கை என்ற அவயவம் அதற்கு இருக்கிறது. தனக்கு வேண்டிய புல்லையுந் தழைகளையும் தும்பிக்கையால் எடுத்து வாய்க்குள் நுழைத்துக்கொள்ளும். மேலும், அதன் பெரிய தலையைத் தாங்குவதற்குச் சுருங்கி நீண்ட கழுத்துதவாது. பன்றிக்கும் யானையைப்போல் குறுகிய கழுத்தும் தந்தம் போன்ற கோரைப் பற்களுமுண்டு. நிலத்தைக் குடைந்து கிழங்குகளைத் தேடியுண்பதற்கு ஏற்றவாறு அதன் கழுத்து அமைந்திருக்கிறது. இவற்றைக் கவனிக்கும் பொழுது, ஒவ்வொரு மிருகமும் அதனதன் வாழ்க்கைக்குந் தொழிலுக்குந் தக்கபடி தேகவமைப்புப் பெற்றிருக்கிறதென்பதை நாம் காண்கின்றோமல்லவா? இந்த வைய



கத்திலுள்ள ஒவ்வொரு பிராணியும் இவ்வாறே உறுப்பு அமையப் பெற்றிருக்கின்றது. நாம் ஒவ்வொன்றையும் கூர்ந்து பார்ப்போமானால் இந்த உண்மை நமக்கு நன்கு புலப்படும்.

## குறிப்புகளும் வினாக்களும்

| | |
|---|---|
| இ + இரண்டு | = இவ்விரண்டு |
| அ + அளவு | = அவ்வளவு |
| இ + காலத்திலும் | = இக்காலத்திலும் |
| இ + வகையில் | = இவ்வகையில் |
| இ + படைவீரர் | = இப்படைவீரர் |

சுட்டெழுத்துக்கள் அ, இ, உ என மூன்று. இவற்றுள் உ பெரும்பாலும் பேசும் வழக்கத்தில் வருவதில்லை. இவை தம்முன் வரும் எழுத்துக்களோடு கூடுமிடத்து, வருமெழுத்து மிகும். அகர, இகரங்களிலிருந்து தோன்றும் அந்த, இந்த என்ற சொற்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| அந்த + பையன் | = அந்தப் பையன் |
| இந்த + சிறுவன் | = இந்தச் சிறுவன் |
| அந்த + மாடு | = அந்த மாடு |
| இந்த + வீடு | = இந்த வீடு |

அந்த, இந்த என்பவற்றின்முன் வல்லெழுத்துக்கள் வரின் வல்லெழுத்து மிகும்.

புல்லிற்கும் மரஞ் செடி கொடி முதலியவற்றிற்குமுள்ள வேற்றுமை என்னவென்றால், புல்லை அறுக்க, அறுக்க, அது வளரும். செடி, கொடி, மரங்களின் இலைகளைக் கொய்துவிட்டால் அவை பழுதுபடும். புல்லிவ்வாறு பழுதுபடாது. இதனால்தான் ஆடு மாடு முதலிய மிருகங்கள் எவ்வளவு மேய்ந்தாலும் புல் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அறுபது, எழுபது அடி உயரம் வளரும் மூங்கிலும் ஒருவகை புல்லேயாகும்.

## 10. கிறிஸ்துபெருமான் பொன்னுரை

மற்றவர்கள் உங்களிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அப்படியே நீங்களும் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளுங்கள்.

உங்களிடத்தில் அன்பு செய்கின்றவர்களை மாத்திரம் நீங்கள் நேசிப்பீர்களாயின், அதனால் நீங்கள் அடையக் கூடிய பயன் யாது?

பாவஞ் செய்து திரிகின்றவர்கள்கூடத் தங்களைச் சிநேகிப்பவர்களிடத்தில் அன்பு பாராட்டுகிறார்களல்லவா?

உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதிற் சிறப்புண்டோ? பாவிகளும் இப்படிச் செய்கின்றார்கள்.

திருப்பிச் செலுத்திவிடக் கூடியவர்களுக்கு நீங்கள் கடன் கொடுத்தால் அதில் என்ன மேன்மையும் நன்மையும் உண்டு. பழியும் பாவமும் நிறைந்தவர்களும் இப்படிக் கடன் கொடுத்து வாங்குவதில்லையோ? ஆகையால்,

உங்களை விரோதிப்பவர்களிடத்தில் அன்பு செய்யுங்கள். நன்மையும் செய்யுங்கள். நீங்கள் பிறருக்குக் கைம்மாறு கருதாது கொடுங்கள்; அப்பொழுது நீங்கள் சிறந்த பயனடைவீர்கள். நன்றி கெட்டவர்களுக்கும் துரோகிகளுக்கும் இறைவன் நன்மை செய்கின்றாரே. இறைவனாகிய தந்தை எல்லோருக்கும் இரங்குவதுபோல் நீங்களும் இரக்கமுடையவர்களாகுங்கள். அப்பொழுது தான் இறைவனுடைய நன்மக்களாவீர்கள்.

# 11. உணவு

உணவு என்ற சொல்லைக் கேட்டவுடனே தமிழ்மக்களாகிய நமக்குச் சோறென்ற நினைவே யுண்டாகின்றது. நாம் சோறுண்பவர்களானதனுல் இப்படி நினைக்கின்ளூம். ஐரோப்பியர்களுக்கு உணவு என்ருல் ரொட்டி முதலியவற்றில் நினைவுண்டாகும். நமது தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் அரிசிகஞ்சி குடித்தே நாளைக் கழிக்கின்ருர்கள். வட இந்தியாவில், முக்கியமாக வட மேற்குப் பாகத்தில் வாழ்கின்ற சீக்கியர்களும் மற்றவர்களும் கோதுமையுணவு சாப்பிடுகின்ருர்கள். இவர்கள் நல்ல தேகவளர்ச்சியுடையவர்களாகவும், பலம், வீரம் உள்ளவர்களாகவும் விளங்குகிருர்கள். இப்படி இவர்கள் தேக பலம், வீரம் முதலியவைகளுடன் விளங்குதற்கு அவர்களுண்ணும் உணவே முக்கிய காரணமாம் என்று உணவின் தன்மைகளை அறிந்தோர் கூறுகின்றனர்.

இளைஞர்களாகிய நீங்கள் நல்ல தேகக்கட்டுடையவர்களாகவும் வலிமையுடையவர்களாகவும் விளங்கவேண்டுமானுல் தகுந்த உணவை அருந்தவேண்டும். தகுந்த உணவு என்று கூறும்போது அதிகச் செலவுபிடிக்கும் உணவென்று நீங்கள் நினைக்கக்கூடாது. குறைந்த செலவிலேயே நல்ல சக்தி கொடுக்கக்கூடிய உணவை நாம் சாப்பிடலாம். ஆகையால் இங்கே சொல்லப்போவதைக் கவனித்துப் படியுங்கள்.

அரிசியைவிட கோதுமை வலிமை கொடுக்கக் கூடியது. விலையும் ஏறக்குறைய ஒன்றேதான். கோதுமையை அரிசிப்பிரமாணத்திற்கு உடைத்துச் சாதம் சமைக்கலாம்; அல்லது அதை நொய்யாக்கி உப்புமா, பொங்கல், இட்டலி, தோசை முதலிய சிற்றுண்டிகளாகச் செய்து சாப்பிடலாம். கஞ்சி காய்ச்சியும் குடிக்கலாம்.

கோதுமைமாவினால் பலவகையான உண்டிகள் செய்யலாம். வட இந்தியாவில் சீக்கியரும் பிறரும் கோதுமை மாவினால் 'சப்பாத்தி' என்ற ஒருவகைப் பூரி செய்து நெய்யுடனும் பருப்புடனுங் கலந்து உண்கின்றார்கள். இது சாலச்சிறந்த ஆகாரம் என்று வைத்திய அறிஞர் வெளியிட்டிருக்கின்றனர். கோதுமைமாவால் செய்யப்பட்ட ரொட்டி உங்கள் எல்லோருக்குந் தெரியும். இது சப்பாத்தியைப்போல் அவ்வளவு சிறந்த உணவன்று. இருந்தாலும் நாமுண்ணும் அரிசி உணவைவிட இது உயர்ந்ததே. ஆகையால் உங்களால் கூடியவரையில் கோதுமையுணவை உட்கொள்ள முயலுங்கள்.

இக்காலத்தில் நாமுண்கின்ற அரிசியுணவு சிறிதும் பொருத்தமானதன்று. அரிசியிலுள்ள சக்தி பெரும்பாலும் அதன்மேல் பொருந்தியிருக்கும் தவிட்டிலுள்ளது. நெல்லை இயந்திரங்களில் குத்துவதால், உமியுடன் தவிடும் நீங்கிவிடுகிறது; தவிடு நீங்கிய அரிசிதான் வெளிவருகின்றது. இப்பொழுது நாடெங்கும் இயந்திரங்களில் நெல் குத்துவதே வழக்கமாகிவிட்டது. கையால் குத்துதல் ஒழிந்துவிட்டது. கையால் குத்தின அரிசியின்மேல் வேண்டிய தவிடும் நிற்கும். இப்படிக் கையால் குத்தப்பட்ட அரிசி கிடைக்குமானால் அதை நாம் பொன்போற் கருதி வாங்கவேண்டும்.

நமக்குக் கடைகளில் தவிடுநீங்கிய அரிசியே கிடைக்கின்றன. இதையாவது நாம் சரியாக உபயோகிக்கின்றோமா? பலமிழந்த அரிசியைக் கழுவி அதிலுள்ள சிறிது தவிட்டையும் போக்கிவிடுகின்றோம். இத்துடன் நிற்கின்றோமா? கழுவிய அரிசியை உலையிலிட்டுக் கொதிக்க வைத்து அதிலிருந்து இறங்குகின்ற சத்துள்ள கஞ்சி நீரை வடித்துக் கீழே கொட்டிவிடுகிறோம்; அல்லது மாடுகளுக்கு ஊற்றுகிறோம். இவ்வாறெல்லாம் அரிசியிலுள்ள

சக்தியைக் கொடுக்கும் சத்தை நீக்கிவிட்டு வெறுஞ்சக்கை போலுள்ள சோற்றை வயிறு நிரம்ப உண்கின்றோம். என்ன பரிதாபம்! உலையிலேற்றியபின் சோற்றிலுள்ள நீரை வடிக்காமல் சுண்டவைத்துச் சாப்பிட நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

கேழ்வரகு என்ற ஒரு தானியத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அரிசியைவிட இது எவ்வளவோ மலிவானது. ஆயினும், அரிசியைவிட எத்தனையோ மடங்கு நன்மையையும் வலிமைதரும் சக்தியையு முடையது. இதை அநேகர் இகழ்ச்சியாகக் கருதுகின்றார்கள். மலிவான சரக்கை இகழ்வது அறியாமையாகும். "நாங்கள் ஏழைகள், உயர்ந்த சாப்பாடு சாப்பிட எங்களால் எப்படி முடியும்?" என்று முறையிடுகிறவர்கள் கேழ்வரகின் குணத்தைக் கவனிப்பார்களாக. கூடிய வரையில் இதை நமது உணவோடு கலந்து உட்கொள்வது நமக்கு மிகுந்த பயனாகும். இதை அடையாகவும், களியாகவும், கஞ்சியாகவும் சாப்பிடலாம்.

நாம் சோற்றை எவ்வாறு கஞ்சிநீர் நீக்கிப் பயனற்றதாகச் செய்கிறோமோ அவ்வாறே காய், கீரை, கிழங்குகளையுங் கெடுத்துவிடுகின்றோம். இவற்றை வேகவைப்பதனால் சத்து குறைந்துபோகின்றது. வேகவைத்தாலும் இவற்றின் சாரத்தை வடிக்காமல் வைத்துப் பதஞ்செய்து உண்ணவேண்டும். ஏனென்றால், வேகவைக்கும் நீரில் இவற்றின் சாரம் இறங்குகின்றது. நமது பெண்மணிகள் நீரை வடியாமல் உணவைப் பதஞ்செய்வதற்கு எவ்வளவு விரைவில் கற்றுக்கொள்ளுகிறார்களோ, அவ்வளவு விரைவில் தமிழ் நாட்டுமக்களுடைய உடல் நன்கு வளரும்.

நாம் கூடியவரை பழங்களைப் புசிக்கவேண்டும். பழம் என்ற உடனே உயர்ந்த விலைகொடுத்து வாங்குகின்ற பழங்களை நாம் நினைத்துவிடக்கூடாது. அவ்வப்போது

நமக்கு எளிதிற் கிடைக்கக்கூடிய வாழை, மா, பலா, கொய்யா, இலந்தை, கமலா, சீதா, வெள்ளரி, நாவல் முதலியவையும் நன்மை தரும் கனிகளே. இவற்றை உணவிற்குப் பின் அருந்துவது நன்று. எலுமிச்சம் பழச்சாறு உடலுக்கு நன்மையாம்.



பொதுவாகப் பழங்களை அழுகவிடாமல் நல்ல நிலையிலிருக்கப்பார்த்து, அளவோடு அருந்துவதால் நன்மையே தவிர கெடுதியொன்றும் நேரிடாது: கனியுணவு மிகவும் ஆரோக்கியமானது.

பார்வைக்கு அழகாயிருக்கின்ற தவிடு நீங்கிய வெள்ளை அரிசியைக்காட்டிலும், தவிட்டோடு கூடிய பார்வையற்ற அரிசியே மேல் என்பதைக் கண்டோம். இதுபோலவே பார்வைக்கு நன்றாயிருக்கின்ற வெண்சர்க்கரையைவிட, வெல்லம் அல்லது கருப்புக்கட்டியே சிறந்தது. அதிகப் பணங்கொடுத்துச் சர்க்கரையை வாங்குவது நஷ்டமே. ஏனெனில், வெல்லத்திலிருந்து சர்க்கரை செய்வதில் அதிலுள்ள சக்திவாய்ந்த பொருள்கள் நீக்கப்படுகின்றன. இப்படியே நாம் மற்றும் பலவகையில் அதிக விலைகொடுத்துக் குறைந்த சத்துள்ள பொருள்களை வாங்குகின்றோம். இதை நாம் துரிதத்தில் நிறுத்த வேண்டும்.

பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவை எக்காலத்தும் சிறந்த உணவுப்பொருள்களாம். இவற்றிலிருக்கும் கொழுப்பு எளிதில் ஜீரணம் ஆகக்கூடியது. அரிசி முதலிய தானிய ஆகாரங்களுடன் இவற்றைச் சேர்த்துச் சாப்பிடுவது உடலுக்கு நலமாகும். ஆகையால் இவற்றையும் நாடியுண்க.

### குறிப்புகளும் வினாக்களும்

சோறு + என்ற நினைவு = சொறென்ற நினைவு
சோறு + உண்பவர்கள் = சோறுண்பவர்கள்
பொருத்தமானது + அன்று = பொருத்தமானதன்று
இவ்வாறு + எல்லாம் = இவ்வாறெல்லாம்
பிழைப்பது + அரிது = பிழைப்பதரிது
கண்டு + ஆனந்தித்தான் = கண்டானந்தித்தான்
பாட்டு + அழகு = பாட்டழகு
மார்பு + அகலம் = மார்பகலம்
உப்பு + அளம் = ?
சோறு + உண்டான் = ?

குற்றியலுகரம் நிலை மொழியினீற்றிலிருக்க வருமொழி முதலில் உயிர்வந்தால் குற்றியலுகரம் நீங்கிவிடும்.

TB 031(6) N48

"பாலோடாயினுங் காலமறிந்துண்"

நல்லுணவை நாமருந்த வேண்டுவது அவசியமாயினும் ஏற்ற வேளையில் உண்ணவேண்டுமென்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும். உணவை ஜீரணஞ்செய்கின்ற வயிறு, நமது கைகால்களைப் போன்ற ஓர் கருவியே. அதிகமாய் வேலைசெய்தால் அல்லது அதிகமாய் நடந்தால் கைகால் சோர்ந்துவிடும். இதுபோலவே வயிற்றிலெப்பொழுதும் உணவு இருக்கும்படி நாம் உண்போமாயின் வயிறு களைத்துப்போய்த் தனது வேலைசெய்ய மறுத்துவிடும். அப்பொழுது நாம் பிணிக்காளாவோம். சிறு வயதிலேயே நீங்களிதை நன்கறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

86503

## 12. முஸ்தாபா

முஸ்தாபா என்று பெயர்கொண்ட சிறிய நாயொன்றிருந்தது. வளர்ப்பவர் எவருமின்றி அது தெருக்களில் அலைந்து திரிந்து, கண்டதை யுண்டு முரட்டுத்தனமாய்ப் பிழைத்து வந்தது. யாரோ அதை அடித்ததன் பயனாக அது நொண்டி நடக்கவேண்டியதாயிற்று. அன்பு காட்டுவார் எவருமின்றி, உணவுகொடுப்பார் ஒருவருமின்றி, தங்க ஓர் இடமுமின்றித் திரிந்த இந்நாய்க்கு எப்படியோ வலதுகண்ணில் அடிபட்டுக் காயமுண்டாகியிருந்தது. அழுக்கு நிறைந்த அதன் உடம்பில் வளர்ந்த மயிர் முனைகளெல்லாம் நரைத்துத் தோன்றின. அது பட்ட கஷ்டத்தாலும் கவலையாலும், ஐயோ பாவம்! அது துரிதத்தில் கிழத்தன்மை யடைந்துவிட்டது.

ஒரு நாளிரவு கரியன் என்ற ஒரு இளமகன் குடித்து, மயங்கியவனாய்த் தடுமாறி நடந்து, தன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான். அவன் போகும் வழியில் ஓரிடத்தில் முஸ்தாபா குளிரினால் ஒடுங்கி நின்றுகொண்டிருந்தது. குடியினால் மதிமயங்கிய நிலையிலும், இளகிய நெஞ்சுடையவனான கரியன், துணையற்றுத் துயருற்று நடுங்கிய நாயை அன்புடனெடுத்து வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போனான். அங்கே அவன் நாயின் அடிபட்ட வலது கண்ணைக் கழுவி, அதன்மீது ஒரு கந்தைத்துணியால் கட்டுப்போட்டு வைத்தான். இவ்வாறு அவன் செய்கையில் முஸ்தாபா அவன் முன்னே ஒடுங்கிப் பதுங்கி நடுங்கினது. தனக்கு அன்புகாட்டி ஆதரித்த கரியனுடைய கைகளைப் பயந்து, பயந்து நக்கித் தன் நன்றியைக் காட்டச் சற்றுத் தைரியங்கொண்டது.

மறுநாள் பொழுது விடிந்தது. தன்னறிவு இழந்து தூங்கிய கரியன் காலையில் விழித்தவுடன் தனது அறை

யில் மண்டைக்கட்டுடன் தோன்றிய நாயைக்கண்டு, அது எவ்வாறு தன் அறைக்குள் வந்ததென்று ஆச்சரியப்பட்டான். அந்த நாயோ தனக்கு என்ன நேருமோவென்று மிகுந்த மனக்கவலையுடன் அவன் முகத்தைப் பார்த்தது. சிறிதுநேரஞ் சென்றபிறகு முந்திய இரவில் நிகழ்ந்த செய்திகள் அவனுடைய நினைவிற்கு வந்தன. அவன் தன் படுக்கையைவிட்டெழுந்து நாயை வெளியே துரத்தும் பொருட்டுக் கதவைத் திறந்தான். இதையறிந்த முஸ்தாபா, உளங்குழைந்து திக்கற்ற தனது நிலையின் சொல்ல முடியாத வருத்தம் தன் கண்களில் வெளியாக, அவனை நன்றியுடன் நோக்கிப்பார்த்தது. இதைக்கண்ட கரியனது நெஞ்சம் இளகிற்று. அந்நாயை அவன் தட்டிக் கொடுத்துத் தன் அறையில் இருக்கும்படி விட்டுவிட்டான்.

நாட்கள் பல சென்றன. நாய்க்கும் கரியனுக்கும் ஒருவிதத் தோழமை யுண்டாயிற்று. இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அவர்களிருவருக்குமிருந்த நட்பு வளர்ந்தது. ஆனால், முஸ்தாபா அளவு கடந்து ஒன்றும் செய்யாமல் மிக்க அடக்கமாயும் ஜாக்ரதையாயும் நடந்துகொண்டுவந்தது. ஒருக்காலும் அது கரியன் தன்னிடங் கொஞ்ச வேண்டுமென்றாவது தன்னைத் தட்டிக்கொடுக்க வேண்டுமென்றாவது தன் செய்கையினால் காட்டிக்கொள்ளவில்லை. தன் செய்கையில் வெறுப்பு வராவண்ணம் அஃதிவ்வாறு நடந்துகொண்டது.

மூன்று ஆண்டுகள் கடந்தபின் அந்நாய்க்கு ஒருவித நோய் கண்டு அதன் மயிர் உதிரத் தொடங்கிற்று. இதனால் கரியனுக்கு வருத்தம் உண்டாயிற்று. நோயுற்ற ஒரு நாயை வைத்துத் தொந்தரவுபட அவனுக்கு மனமில்லை. அந்த ஊரில் நோய் பிடித்த நாய்களுக்குச் சிகிச்சை செய்ய இடமொன்றுமில்லாமையால், கரியன்

முஸ்தாபாவைத் தண்ணீரில் அழுத்திக் கொன்றுவிடத் தீர்மானித்தான்.

ஒருநாள் பொழுதுபோனபின், கரியன் அந்நாயை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றான். அவ்விரவு விண்ணில் நிலவு இல்லை. கடுங்காற்றால் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. கரியன் ஒரு கயிற்றின் முனையைச் சுருக்கிட்டு, அதில் ஒரு கல்லைக் கட்டி, கல்லை நாயின் கழுத்தோடு பிணைத்து நாயை முரட்டுத்தனமாகத் தூக்கிக் கடலில் வீசி எறிந்தான். அது கூச்ச



லிடவுமில்லை, கூத்தாடவுமில்லை. அது கடலில் விழுந்த சத்தம் கரியன் காதில் விழுந்தது. அவன் சிறிது திடுக்கிட்டு வெட்கம் அடைந்தவனாகச் சத்தங் கேட்ட இடத்திற்கு நேரே எட்டிப்பார்த்தான். அப்பொழுது திடீரென்று ஒரு மும்முரமான காற்று வீசி, அவன் தலையில் அணிந்திருந்த தொப்பியை அடித்துக்

கொண்டு போய்விட்டது. அந்தத் தொப்பி கரியனது அன்பார்ந்த நேசர் ஒருவரால் அளிக்கப்பட்டது. அவன் மிக்க ஆவலுடன் தொப்பி கடலில் விழுந்த இடத்தைக் கவனித்துப்பார்த்தான். நுரை வீசிய திரைகளைத் தவிர வேறொன்றையும் அவன் காணவில்லை. இறுதியில் அவன் அதிகச் சோர்வடைந்தவனாக வீட்டிற்குத் திரும்பினான்.

வீட்டிற்குச்சென்று அவன் படுத்து ஒருமணி நேரமானபின், தனது அறையின் கதவைச் சுரண்டுகின்ற சத்தம் உண்டானதைக் கேட்டான். அவன் குதித்தெழுந்துபோய்க் கதவைத் திறந்தான். அங்கே முஸ்தாபா கரியனுடைய தொப்பியைத் தன் வாயில் கௌவிக் கொண்டு வந்து நின்றது.

என்ன பரிதாபம்! அதன் உடலில் இரத்தக் குறிகளிருந்தன. அதன் மயிரிலிருந்து வடிந்த தண்ணீர் இரத்தத்தோடு கலந்து தரையில் சொட்டுச் சொட்டாய் விழுந்தது. கரியன் கீழே குனிந்து நாயைத் தன் மார்போடணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதான். அதன் உடலைச் சுத்தமான துணிகளால் மெல்ல ஒற்றித் துடைத்தான். முஸ்தாபா தன் எஜமானனைக் கடைசியாகப் பரிதாபம் நிறைந்த தன் கண்களால் பார்த்துத் தேம்பியழுவதுபோல் குலைத்து அவன் காலடியில் உயிரை விட்டது.

இவர்களிற் சிறந்தவர் யார்?

## குறிப்புகளும் வினாக்களும்

போய் + கொண்டிருந்தான் = போய்க்கொண்டிருந்தான்

முரட்டுத்தனமாய் + பிழைத்து வந்தது = முரட்டுத்தனமாய்ப் பிழைத்து வந்தது

போய் + கதவைத் திறந்தான் = போய்க் கதவைத் திறந்தான்

நாய் + குட்டி = நாய்க்குட்டி
விரைவாய் + பேசினன் = விரைவாய்ப் பேசினன்
நன்றாய் + பார்த்தான் = நன்றாய்ப் பார்த்தான்

நிலைமொழி ஈற்றில் யகர மெய்யிருக்க வருமொழி முதலில் வல்லினம் வரின் மிகும்.

விலங்குகளுள் மக்களோடு நெருங்கிப் பழகுந்தன்மையில் நாயே மிகச் சிறந்து விளங்குகிறது. தன்னை வளர்ப்பவன்பொருட்டு அது தன்னுயிரையுங்கொடுக்கும் நன்றியுடையது.

ஒருவருக்குஞ் சொந்தமின்றித் தெருவில் அலைந்து திரிந்த முஸ்தாபாவும் நன்றியை மறக்கவில்லை. முஸ்தாபாவின் முடிவை நினைத்தால் உங்கள் மனம் இறங்குகிறதல்லவா?

முஸ்தாபா இறந்தபின் கரியன் யாது செய்திருப்பான்?

---

## 13. வேடுவர் காணிக்கை

தமிழ் நாட்டை முடியுடை மன்னர் மூவர் ஆண்டு வந்தார்கள். இவர்கள் சேர, சோழ, பாண்டியர் எனப் படுவர். சேரன் மலையாள நாட்டையும், சோழன் திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு முதலிய இடங்களையும், பாண்டியன் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களையும் ஆண்டு வந்தார்கள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் சேரர் குடியிற் பிறந்த செங்குட்டுவன் என்பான் மலைவளம் பார்க்க, மலையாள நாட்டிலுள்ள பேரியாறு என்னும் ஆற்றின் கரையில் வந்து தங்கினன். அப்போது மலை நாட்டார்களாகிய வேடுவர்கள் தங்கள் அரசனைக் காண்பதற்குச் சில பொருள்களைக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். அப்பொருள்களாவன:—

(சிலப்பதிகாரம்; காட்சிக்காதை; வரி 37–54 மனப்பாடம் செய்தற்குரியது)

"யானைவெண்கோடும், அகிலின் குப்பையும்
மான் மயிர்க்கவரியும், மதுவின் குடங்களும்
சந்தனக்குறையும், சிந்துரக்கட்டியும்
அஞ்சனத்திரளும், அணியரிதாரமும்
ஏலவல்லியும், இருங்கறிவல்லியும்
கூவைநீறும், கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழமும், தேமாங்கனியும்
பைங்கொடிப்படலையும், பலவின் பழங்களும்
காயமும் கரும்பும், பூமலி கொடியும்
கொழுந்தாட்கமுகின், செழுங்குலைத்தாறும்
பெருங்குலை வாழையின், இருங்கனித்தாறும்
ஆளியின் அணங்கும், அரியின் குருளையும்
வாள்வரிப்பறழும், மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும், குடாவடியுளியமும்
வரையாடு வருடையும், மடமான் மறியும்
காசறைக்கருவும், மாசறு நகுலமும்
பீலிமஞ்ஞையும், நாவியின் பிள்ளையும்
கானக்கோழியும், தேமொழிக்கிள்ளையும்"—
முதலியன.

1. யானை வெண்கோடு = யானைத்தந்தம்
அகில் குப்பை = அகில் கட்டைகளின் திரள்

2. மான் மயிர்க்கவரி = வெண்சாமரை
மதுவின் குடம் = தேன் குடம்

3. சந்தனக்குறை = சந்தனக்கட்டை
சிந்துரக்கட்டி = சிவந்த வாசனைப்பொடி

4. அஞ்சனத்திரள் = கரு நிறம் வாய்ந்த வாசனைப் பொடி
அணி அரிதாரம் = மஞ்சள் நிறம் பொருந்திய வாசனைப்பொடி
5. ஏலவல்லி = ஏலக்காயுடன் கூடிய கொடி
இருங்கறிவல்லி = கரிய மிளகுக்கொடி
6. கூவை நீறும் = கூவைக்கிழங்கின் வாசனைத்தூள்
கொழுங்கொடிக்கவலையும் = கவலைக்கிழங்கும் (இது வள்ளிக்கிழங்கு போலும்)
7. தெங்கின் பழமும் = தேங்காயும்
தேமாங்கனி = இனிய மாம்பழங்கள்
8. படலை = மாலை
காயம் = வெங்காயம்
9. பூமலி கொடியும் = பூக்கொடிகளும்
10. கமுகின்...தாறும் = பாக்கின் குலையும்
11. வாழையின்...தாறும் = வாழைக்குலையும்
12. ஆளியின் அணங்கும் = யாளிக்குட்டியும்
அரியின் குருளையும் = சிங்கக்குட்டியும்
13. வாள்வரிப்பறழும் = புலிக்குட்டியும்
மதகரிக்களபமும் = யானைக்கன்றும்
14. குடாவடி யுளியமும் = கரடிக்குட்டியும்
15. வரையாடு வருடையும் = மலையாட்டுக்குட்டியும்
மடமான் மறியும் = மான்குட்டியும்
16. காசறைக்கருவும் = கஸ்தூரி மான்குட்டியும்
மாசறு நகுலமும் = குற்றமில்லாத கீரிப்பிள்ளைக் [குட்டியும்
17. பீலிமஞ்ஞையும் = மயில் குஞ்சும்
நாவியின் பிள்ளையும் = பூனுகுப் பூனைக் குட்டியும்
18. கானக்கோழியும் = காட்டுக்கோழியும்
தேமொழிக்கிள்ளையும் = இனிமையான சொற்களையுடைய கிளியும்

குறிப்புகளும் வினக்களும்

சந்தனம் + குறை = சந்தனக்குறை
சிந்தூரம் + கட்டி = சிந்தூரக்கட்டி
அஞ்சனம் + திரள் = அஞ்சனத்திரள்
கானம் + கோழி = கானக்கோழி
(கானம் = காடு)

மகர ஒற்றை இறுதியிலுடைய சொல்லிற்குப்பின் வல்லினம் முதலிலுடைய சொல் வந்தால் மகரம் அழிந்து வல்லினம் மிகும்.

வெல்லம் + தண்ணீர் = வெல்லத்தண்ணீர்
குளம் + கரை = குளக்கரை
முகம் + தாக்ஷணியம் = முகத்தாக்ஷணியம்
ஆயிரம் + கால்மண்டபம் = ?
பழம் + சாறு = ?

---

# 14. ஜி. யூ. போப் ஐயர்

போப் ஐயரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். ஆனல், இருபது முப்பது வருஷங்களுக்கு முன் சிறுவகுப்பில் படித்த பலர், அவருடைய பெயரை நன்கு அறிந்திருந்தார்கள். ஏனென்றுல் அவரியற்றிய தமிழிலக்கணம் அக்காலத்தில் சிறுவகுப்பில் படித்த பிள்ளைகளுக்கெல்லாம் பாடபுத்தகமாக விருந்தது. அதைப் போப்பைய ரிலக்கணம் என்று சொல்லுவார்கள். உங்களில் ஒருவேளை சிலர் போப் ஐயர் என்றுல் ஒரு பிராமணர் என்று நினைக்கக்கூடும். அவர் பிராமண ரல்லர். அவர் ஒரு கிறிஸ்தவ மத ஆசிரியர். நாம் பேசுகின்ற தமிழ் மொழிக்கு அவர் செய்திருக்குந் தொண்டு பெரிதாகையால் அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தமிழ்ப் படிக்கும் நீங்களறிவது மிக்க பயனுகும்.

இவர் வட அமெரிக்காவைச் சேர்ந்த நோவாஸ்கோஷியா என்ற பகுதியில் 1820-ம் வருடம் எப்ரல் மாதம் 24-ம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை அந்நாட்டில் ஒரு வர்த்தகராயிருந்தார். தாம் பிறந்த நாட்டில் தமது கல்வியை முடித்தபின், தந்தையைப் போல் ஒரு வியாபாரியாக மனமில்லாதவராய்த் தமது ஆண்டவராகிய கிறிஸ்துபெருமானுக்குச் சேவை செய்வதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். இதன் பொருட்டவர் 1839-ம் ஆண்டில் இந்நாட்டிற்கு வந்து திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சாயர்புரம் என்னுமூரில் எஸ். பி. ஜி. (S. P. G.) மிஷனர் நடத்திவந்த வேலையிற் புகுந்தார். இங்கு அவர் குருவாக இருந்து வேலைபார்த்த பின், அங்குத் தாம் ஸ்தாபித்த பாடசாலையில் ஆசிரியராய் இருந்து மாணுக்கருக்குக் கல்வி புகட்டிவந்தார். இங்ஙனம், அவர் தமது தொழிலைச் செய்துவருங்கால் தமிழை நன்கு கற்கவேண்டுமென்ற ஆவலுடையவராகி, அக்காலத்தில் கல்விகேள்விகளிற் சிறந்திருந்த ஆரியங்காவுப் பிள்ளை முதலியவரிடம் மொழிப்பயிற்சி பெற்றார்.

தமிழை இவர் திருந்தக் கற்றபின் அம்மொழியைக் கற்கும் பிறருக்கு எந்தவகையில் தாம் உதவக்கூடும் என்பதை எண்ணி, எளிய முறையில் இலக்கணம் எழுதத் தொடங்கினர். அக்காலத்தில் தமிழ் இலக்கணங்களெல்லாம் செய்யுள் நடையிலிருந்தனவேயன்றி, வசன நடையிலில்லை. செய்யுள் நடையில் கதைகளைப் படித்தறிந்துகொள்வதே பலருக்குக் கஷ்டமாயிருந்தது. இலக்கணத்தை யவர்கள் எப்படி எளிதாகக் கற்கமுடியும்? இக்காலத்திலும் செய்யுள் நடையிலொன்றைப் படிப்பதற்கு மாணவர் பெரிதும் வருந்துகின்றனர். சிறு பிள்ளைகள் எளிதாக இலக்கணம் அறிந்துகொள்ளும்படி போப்பையர் வசனநடையில் முதல்முதல் இலக்கணம்

செய்தார். நமக்குச் செய்த இவ்வுதவிக்கு நாம் அவருக்கு நன்றிபாராட்டவேண்டும்.

கல்வி கற்றுத் தேர்ந்தவர்களிற் பலர் தாமடைந்த கல்வியை மற்றவர்கள் அடையவேண்டுமென்ற ஆவல் கொள்வதில்லை. கல்விகற்றவர் தாமறிந்ததைப் பிறருக்கு எளிதாகவும் இனிதாகவும் புகட்டக்கூடிய முறைகளைத் தேடுவது அவசியம் அல்லவா? தமிழ் இலக்கணம் கற்பதில் தாமடைந்த கஷ்டங்களை நன்குணர்ந்து போப்பையர் வசனநடையில் இலக்கணம் செய்தால்தான் அது பலருக்கும் பயன்படுமென்பதைக் கண்டார். அவ்வாறே அவர் இயற்றிய இலக்கணம் ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டது. இப்பொழுது வசனநடையில் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூல்கள் மிக மலிந்துள்ளன. ஆனால், முதன்முதல் இதற்கு வழிகாட்டியவர் போப்பையர் என்பதை நாம் மறக்கலாகாது. இங்ஙனம் தமிழ் கற்கும் தமிழ்மக்களுக்கு உதவியாயிருக்குமாறு தமிழ் இலக்கணம் செய்ததுடன் இந்தியாவிற்கு வருகின்ற ஆங்கிலேயர்கள் தமிழைக் கற்றுக்கொள்வதற்கு உபயோகமாக ஆங்கிலத்திலும் போப்பையர் ஒரு நூல் எழுதினர். இப்புத்தகம் இன்றும் உபயோகத்திலுள்ளது. அவர் செய்த தமிழ் இலக்கணம் இன்றும் சில விடங்களில் படிக்கப்படுகின்றது. இந்த நூல்களை அவர் இயற்றிய காலத்தில் தமது தொழிலையும் குறைபடாமற் செய்துவந்தார். அன்றியும், சங்கநூல்கள் என்று சொல்லப்படுகின்ற சிறந்த தமிழ் நூல்களையும் இடைவிடாது பயின்றார். இதை உற்று நோக்கும்பொழுது அவர் தமது காலத்தை எவ்வளவு பயன்படுத்திவந்தார் என்பது தெளிவாய் விளங்குகின்றது.

இவர் கற்ற நூல்களில் நாலடியாரும் திருக்குறளும் சிறப்பாகக் கூறத்தக்கன. இந்தப் புஸ்தகத்தில் நாலடியாரிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் சில செய்யுட்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலே பிறந்து தமிழ் பேசுகின்ற நீங்கள், இச்செய்யுள்களைப் படித்துப் பொருளறிந்துகொள்ளச் சிறிது வருத்தப்படுவீர்கள். ஆங்கில நாட்டிற் பிறந்து ஆங்கில மொழியைப் பயின்ற நமது போப்பையர் இவ்விரு நூல்களையுந் தமிழில் படித்தறிந்ததுமின்றி ஆங்கிலத்திலும் இவைகளை மொழிபெயர்க்கக்கூடிய திறமையடைந்திருந்தார். இதனால் அவர் நூல்களை எவ்வளவு நுணுக்கமாய்க் கற்ருரென்று நீங்களே யறிந்துகொள்ளலாம்.

சாயர்புர மென்னும் இடத்தில் பத்து வருஷம் உழைத்தபின் 1849-ம் ஆண்டில் போப்பையர் இங்கிலாந்திற்குச் சென்ருர். அங்கு போய் அவர் ஓய்ந்திருக்கவில்லை. இங்கிலாந்தில் புகழ்பெற்ற அத்தியக்ஷராயிருந்த வில்பர்போர்ஸ் (Wilberforce) என்பவருக்கு உதவிசெய்யுங் குருவாய், இங்கிலாந்தில் அவர் தம் காலத்தைக் கழித்து, 1851-ம் ஆண்டில் மறுபடியும் இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவிற்குத் திரும்பிய போப்பையர் தஞ்சாவூரில் பீற்றர்ஸ் கலாசாலையை ஸ்தாபித்து அதை நடத்தினர். இதன்பின் உதகமண்டலம், பெங்களூர் என்ற விடங்களில் ஐரோப்பிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உயர்தரக் கலாசாலைகளில் தலைவராய் அமர்ந்து வேலைசெய்தார். இவ்வாறு கலாசாலைத் தலைவராயிருந்த காலத்திலும் அவர் தமது தமிழ்ப் பயிற்சியைக் கைவிட்டவரல்லர். தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களைப் பயின்றுவந்தார். இந்நூல்கள் அக்காலத்தில் அச்சிலில்லை. இவைகளை ஏடுகளிலிருந்து எவ்வளவு வருந்திப் பயின்றிருக்க வேண்டுமென்று நினைக்

கிறீர்கள்? இவரோடு பழகிய தமிழ்மக்கள் இவர்பால் பெரிதும் அன்புபாராட்டித் தங்கள் குருவாகவே நினைத்து ஒழுகினர்.

1880-ம் ஆண்டில் போப்பையர் தென்னிந்தியாவை விட்டு இங்கிலாந்திற்குத் திரும்பினர். ஏறக்குறைய 40 வருஷங்கள் உழைத்தபின், வேண்டுமானல் அவர் இங்கிலாந்தில் ஓய்வுபெற்று இனிதாக நாள் கழித்திருக்கலாம். அவ்வாறு செய்தனரோ? இங்கிலாந்திலும் அவர் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளில் தமக்கிருந்த அறிவை வளர்த்துக்கொண்டும், துரைத்தன உத்தியோகத்தின் பொருட்டு இந்தியாவிற்கு வரும் ஆங்கில வாலிபருக்கு இம்மொழிகளைக் கற்பித்துக்கொண்டும் வந்தனர். இதுவுமன்றி, தமிழ் வேதமாய் எண்ணப்படுந் திருக்குறளையும், நாலடியார், திருவாசகம் முழுவதையும், சிவஞான போதம், புறநானூறு முதலிய நூல்களிற் சில பகுதிகளையும், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இறுதியளவும் அவர் மனச்சோர்வின்றித் தமிழ்த் தொண்டுபுரிந்துவந்தார். இவரது அறிய திறமையைப் புகழ்ந்து இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தார் இவருக்கு எம். ஏ. (M. A.) பட்டம் அளித்தார்கள். காலஞ்சென்ற விக்டோரியா சக்கரவர்த்தினியின் அறுபதாம் ஆண்டு விழாவில் இவருக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசாக அளிக்கப்பட்டது. மற்றும், ஆங்கில கிறிஸ்தவ சபையின் தலைவரால் வேதசாஸ்திரப் பண்டிதர் என்று பொருள்படும் டீ. டீ. (D. D.) என்ற பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டது.

இப்பெரியார் 1908-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 12-ம் நாள் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். இறப்பதற்குச் சில காலத்திற்குமுன், சென்னையிலிருந்த தமது

நண்பராகிய திருவாளர் தோ. ராமகிருஷ்ணப் பிள்ளை யவர்களுக்குத் தாம் எழுதிய கடிதத்தில்,

"பிரிய நண்பரே! இவ்வையகத்தில் யான் சின்னாளே உயிருடனிருக்கப்போகிறேன். ஆதலின் தீமையை முற்றிலும் விட்டுவிலகி ஆன்மாவில் உயர எழும்பி, பரம தந்தையிடம் சென்று, அன்பு நிறைந்த அவர் இருகாத்திற் சாய்ந்து அமர்ந்துகொள்வதே நம்மெல்லோரையும் பொறுத்த கடனாயிருக்கிறது"

என்றெழுதினார்.

தமிழின் பேரில் அவருக்கிருந்த பற்று மிக மிகப் பெரிது. அவர் இறக்குந்தருவாயில் அன்பர் ஒருவர் வந்து,

"யாங்கள் தங்களுக்குச் செய்யக்கூடியது யாதாயினுமுண்டோ?" என்று வினவியபொழுது அவர்,

"என்னை அடக்கஞ்செய்தபிறகு கல்லறையின் மேல், 'நான் ஒரு தமிழ் மாணவன்' என்று நீங்கள் எழுதவேண்டும்"

எனப் பகர்ந்தாராம். என்னே, இவருக்கிருந்த தமிழ்ப் பற்று! பிள்ளைகாள்! இவ்வுத்தமருடைய வாழ்க்கை மிகுதியும் போற்றுதற்குரியதல்லவா? நீங்களும் அவரைப்போல் தமிழ்ப்பற்றுடையவராகித் தமிழ் மொழிக்குத் தொண்டுசெய்யுங்கள்!

### குறிப்புகளும் வினாக்களும்

நோக்கமாக + கொண்டிருந்தார் = நோக்கமாகக் கொண்டிருந்தார்

உதவ + கூடும் = உதவக்கூடும்

எழுத + தொடங்கினார் = எழுதத்தொடங்கினார்

எளிதாக + கற்கமுடியும் = எளிதாகக் கற்கமுடியும்
சிறப்பாக + கூறத்தக்கன = சிறப்பாகக் கூறத்தக்கன
பார்க்க + போனான் = பார்க்கப்போனான்
காக்கை பறக்க + கண்டான் = காக்கை பறக்கக்கண்டான்

அகரத்தை இறுதியிலுடைய வினை எச்சங்களுக்குமுன் வல்லெழுத்தை முதலிலுடைய சொற்கள் வந்தால் வல்லெழுத்து மிகும்.

---

## 15. தண்ணீர்

நாம் முன் மரங்களைப்பற்றிப் படித்த பாடத்தில், மரம், செடி, கொடி, புல் முதலியவை இல்லாவிட்டால் இந்த வுலகம் பார்ப்பதற்கு மிக்க அருவருப்பா யிருக்கு மென்பதைக் கண்டோம். பசுமை நிறமுடைய இலைகளும் பல நிறமுடைய பூக்களும் இங்கே இல்லாவிடின், நமது கண்கள் குளிர்ச்சியையும் இனிமையையும் பெறுமோ? பசுமையான இலைகளையும், பலநிறப் பூக்களையும் பார்த்து மகிழ்வதற்காகப் பலர் தோட்டங்கள் வைத்து வளர்க்கிறார்கள். வீடுகள் நெருங்கக் கட்டப்பட்டிருக்கும் நகரங்களில் வசிப்பவர்கள், தோட்டம் உண்டாக்குவதற்கு இடமில்லாது, தொட்டிகளிற் செடி, கொடிகளை வளர்த்து மகிழ்கின்றார்கள். உங்களுடைய பள்ளிக்கூடங்களிலும் தோட்டங்கள் உண்டல்லவா?



மரம், செடி, கொடிகள் நமது கண்களுக்கு இனிமையளிப்பதுடன் நமக்கு வேண்டிய உணவையுங் கொடுத்து உதவுகின்றன. இவைகள் இல்லாவிட்டால், விலங்குகளும் மனிதர்களும் பிழைக்கமுடியா தென்பதையும்

பார்த்தோம். ஆனல், மரம், செடி, புல் முதலியவை வளர்வதற்குத் தண்ணீர் அவசியமல்லவா? தண்ணீரில்லாதவிடத்தில் ஒன்றும் வளராது. ஆகையால், உலகத்தில் தாவர வர்க்கத்தால் உண்டாகும் அழகுக்குத் தண்ணீரே முக்கிய காரணமாம். ஆப்பிரிக்காக் கண்டத்திலும் அரேபியா நாட்டிலும் தண்ணீரற்ற அகன்ற வனந்தரங்களிருக்கின்றன. அங்கே, எத்திசை நோக்கினும், எவ்வளவு தூரம் கண்களைச் செலுத்தினும், மணலைத்தவிர வேறொன்றையும் பார்க்கமுடியாது.

இவ்வகையான இடங்களில் மக்கள் ஜீவிக்கமுடியுமா? நீரில்லாவிட்டால் உலகம் முழுவதும் ஒரு வனந்தரமாகவே மாறிவிடும். உயிரென்பதே அற்றுப்போம். நாம் உணவில்லாமல் சிலநாள் உயிரோடிருக்க முடியும். நீரில்லாமல் ஒரு நாட்பொழுதும் நம்மால் உயிர்வாழ முடியாது.

நமக்கிவ்வளவு அவசியமான தண்ணீரை நாம் விலை கொடுத்து வாங்குவதாயிருந்தால் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியதா யிருக்கும்! அது நமக்கு விலையின்றிக் கிடைப்பதனல் அதன் அருமையை நாம் உணராமலிருக்கின்றோம்.

நமது உடலில் ஓடுகின்ற இரத்தத்தில் பெரும்பாகம் நீர்தான். தமிழில் இதற்குச் செந்நீர் என்று பெயர். நாம் ஏற்ற அளவு நீர் குடிக்காவிடின், நமது உடம்பில் இரத்தம் ஓடாது. நாம் சீக்கிரத்தில் இறந்துபோவோம். நம்முடைய உடலில் முக்காற்பங்கு நீரேயாகும்.

நமது உலகத்தின் மேற்பரப்பில் முக்காற்பங்கு ஜலம், காற்பங்குதான் நிலம். இவ்வளவு நீர் உலகத்திலிருப்பதனல்தான் நம்முடைய வாழ்க்கை செவ்வனே நடைபெறுகின்றது. ஆறும், அருவியும், பொய்கையும், குளமும், கடலும் இல்லாவிட்டால் இந்த உலகத்தின்

அழகில் பெரும்பாகம்போய்விடும். கடற்கரை எவ்வளவு உல்லாசமாக இருக்கின்றது! மலையினின்றும் விழுகிற




பாபநாசம் நீர்வீழ்ச்சி

அருவி பார்ப்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றது! ஆறும் குளமும் எவ்வளவு அழகாயிருக்கின்றன! பொய்கையுங் கிணறும் மக்களுக்கு எவ்வளவு பயன் படுகின்றன! சூரியன் சினந்து காய்கின்ற வெயிற் காலத்தில், மேகங்களிலிருந்து மழை பெய்கின்ற காட்சி எவ்வளவு அழகாயிருக்கின்றது!

நமது உடலில் இரத்தம் ஒவ்வொரு பாகத்திற்கும் ஓடி உடல் முழுவதையும் செம்மைப்படுத்துவதுபோல், தண்ணீரும் நிலத்தில் பலவிடங்களில் பாய்ந்து அதைச் செழிக்கச் செய்கின்றது. நம்முடைய வீட்டுக்கூரைகளிலும், தெருக்களிலும், சாக்கடைகளிலும் சேர்கின்ற

அழுக்குகளைக் கழுவிப்போக்க எவ்வளவு தண்ணீர் வேண்டியிருக்கும் என்று நாம் நினைப்போமானால், உலக முழுவதற்கும் எவ்வளவு தண்ணீர் வேண்டியிருக்கும் என்று யூகிக்கலாம். மழை சில நாழிகையே



பெய்து இந்த மிகப் பெரிய வேலையை நமக்குச் செய்து உதவுகின்றது. இரத்தமும் உடலிற்குள்ளிருக்கும் அழுக்கையெல்லாம் இப்படியே சுத்தம் செய்கின்றது. நிலத்தைத் தண்ணீர் எப்படி சுத்தம்செய்கின்றதோ அப்படியே உடலை இரத்தம் சுத்தப்படுத்துகின்றது.

நாம் உட்கொள்கின்ற ஆகாரங்களில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது தெரியுமா? பழங்களில் நூற்றுக்கு ஐம்பது பாகத்துக்குமேல் நீர்தான். வெள்ளரிக்காயில் நூற்றுக்கு தொண்ணூறு பாகத்திற்குமேல் நீரே. பாலில்

நூற்றுக்கு எண்பத்தேழு பாகம் நீர். முட்டையில் நூற்றுக்கு அறுபத்தாறு பாகமும், உருளைக்கிழங்கில் எழுபத்தைந்து பாகமும் நீரேயன்றி வேறன்று.

நீர் இறுகிப்போமாயின், அதை 'ஐஸ்' என்று சொல்லுகின்றோம். வெயிற்காலத்தில் இந்த நீர்க்கட்டியைப் பானங்களில் நாம் கரைத்துப் பருகுகின்றோம். நமக்கு ஜுரம் வருமாயின், அது தணிவதற்குத் தலையில் ஐஸை வைக்கிறார்கள். குளிர்ந்த நாடுகளில் மார்கழி, தை மாதங்களில் உறைபனி விழுந்து தரையையெல்லாம் மூடிக்கொள்ளும். இதற்கு சமஸ்கிருதத்தில் 'ஹிமம்' என்று பெயர். இது நிறைந்திருக்கின்ற மலையை 'ஹிமாலயம்' என்று சொல்கின்றோம். பெரிய மலைகளிற் கிடக்கின்ற உறைபனி, வெயிற்காலத்தில் உருகி ஆறுகளாய்ப் பாய்கின்றது. கங்கை இப்படிப்பட்ட ஒரு ஆறே. இந்த கங்கை நதியின் நீர் உடலழுக்கைப் போக்குவதுடன் உள்ளத்திலுள்ள பாவத்தையும் நீக்கிவிடுமென்று பலர் நினைக்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் உறைபனி என்பதே கிடையாது. இந்தியாவில் ஹிமாலய மலை ஒன்றில் தான் அதைப் பார்க்கலாம். வட துருவத்திலும் தென் துருவத்திலும் எங்கே பார்த்தாலும் உறைபனி மயமாகத்தானிருக்கும். பாலைவனத்திலாவது ஏதோ சிலவிடங்களில் மரங்களும் ஊற்றுகளுமுண்டு. உறைபனி மூடிக்கிடக்கும் வடதுருவத்திலும் தென்துருவத்திலும் மரத்தைக் காண்பது அரிது.

நீரைக் கொதிக்கவைத்து ஆவியாக்கி ரயில்வண்டிகள் ஓடவும், கப்பல்கள் செல்லவும், பற்பல இயந்திரங்கள் சுழலவும் உபயோகிக்கின்றோம். நீர்வீழ்ச்சிகளின் மூலமாகவும் இயந்திரங்கள் ஓடுகின்றன. நாம் மிகச் சாதாரணமானதென்று எண்ணுகின்ற இந்த நீர், ஆவியாக மாறி, மேகமாய்த் திரண்டு, ஆகாயத்தில் திரியும்

பொழுது, நடுக்கந் தருகின்ற இடியும் மின்னலும் உண்டா கின்றன. கடல் கொந்தளிக்கும்பொழுது அது நம்மை திடுக்கிடச் செய்கின்றது. ஆறுகளில் வெள்ளம் புரண்டு வரும்பொழுது அது நம்மை அஞ்சியோடச் செய்கின் றது. நீரின் வல்லமை பெரிது.

குறிப்புகளும் வினுக்களும்

இனிமை + அளிப்பதுடன் = இனிமையளிப்பதுடன்

நீரே + ஆகும் = நீரேயாகும்

அழுக்கை + எல்லாம் = அழுக்கையெல்லாம்

ஆவி + ஆக்கி = ஆவியாக்கி

ஈ + ஓட்டுகிருன் = ஈயோட்டுகிருன்

நிலைமொழியின் இறுதியில், இ, ஈ, ஐ இருக்க, அவற்றிற்குமுன் உயிர்வந்தால் நடுவில் யகரம் தோன்றும். இதற்கு யகர உடம்படு மெய் யென்று பெயர்.

நிலைமொழியிறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர்வரின் அவை ஒன்றுகூடா. அதனுல் அவ்விரண்டுயிர்களையும் உடன்படுத்து தற்கு நடுவில் வரும் "உடம்படு மெய்."

உடன்படுத்தும் மெய் உடம்படு மெய் யென்ருயிற்று.

## 16. சாமுவேல்

பதினறு வயதுடைய சாமுவேல் என்று பெயர் கொண்ட பிள்ளையாண்டான், பள்ளிக்கூட இறுதி வகுப் பிற் படிப்பவன். இனிய முகமும் விரிந்த கண்களு முடையவன், நல்ல உடற் கட்டமைந்தவன், தனது பள் ளியில் காற்பந்து விளையாடுபவர்க்குத் தலைவன். இவன் ஒரு புதன்கிழமைக் காலையில் பள்ளிக்குப் புறப்பட்டுப் போகும் வழியில், தன்னுடைய பள்ளிக்கூடத்தில் படிக் கின்ற சிறு பிள்ளைகள் இருவர் கோலி விளையாடிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் விளையாடிக்கொண்டிருக்கை யில் எறக்குறைய பதினன்கு வயதுடைய சிமியோன் என்னும் பெயருள்ள ஓர் இளைஞன், சிறுவர்களில் ஒரு

வன் கையிலிருந்த கோலிகளைப் பிடுங்கிக்கொண்டான். கோலிகளை இழந்த சிறுவன், எவ்வளவோ இரங்கிக் கேட்டுப்பார்த்தும் சிமியோன் கோலிகளைக் கொடுக்க மறுத்து



விட்டான்; மேலும் அச்சிறுவனைப் பயமுறுத்தித் தாக்கவும் போனான். இந்நிகழ்ச்சிகளைச் சாமுவேல் பார்த்துக்கொண்டு நின்றான். சிமியோனின் செய்கையைக் கண்டு சாமுவேல் சினமடைந்தான். கோலியை இழந்துவிட்ட சிறுவன் தன் விழியிற் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கீழே வைத்திருந்த தன் புத்தகங்களை எடுத்துக்கொண்டான். அச்சிறுவன் அழுவதைக் கண்ட சாமுவேலின் மனம் உருகியது.

சாமுவேல், சிமியோன் நின்ற இடத்திற்கு விரைந்து சென்று, ''நீ இச்சிறுவனிடமிருந்து அபகரித்த கோலிகளைக் கொடுத்துவிடு'' என்று கோபித்துச் சொன்னான்.

''நீ யாரடா என்னைக் கேட்கிறவன்? உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ'' என்று சிமியோன் விளம்பினான்.

“உன்னைவிடச் சிறியவனிடத்திலிருந்து நீ பலவந்தமாகக் கோலிகளைப் பறித்துக்கொண்டாய். நான் பார்த்தேன். கோலிகளைக் கொடுக்கப்போகிறாயா, இல்லையா?” என்று சாமுவேல் முன்னினும் மிகச் சினந்து கேட்டான். சாமுவேல் சொன்னதைச் சிமியோன் சிறிதும் மதிக்காது, “நீ என்ன செய்துவிடுவாய்? உன்னைப்போல் பலரை நான் பார்த்திருக்கிறேன். வாய் மூடிக்கொண்டு போ,” என்று இகழ்ந்து மொழிந்தான். அவன் சொன்ன வார்த்தைகளைப் பொறுக்க முடியாதவனாய்ச் சாமுவேல் அவன்மீது பாய்ந்து கைகளைப் பிடித்து, அவன் இறுகப் பற்றிக்கொண்டிருந்த கோலிகளை அவன் விரல்களை நீக்கி எடுத்து, அவற்றைச் சிறுவன் கையிற் கொடுத்தான். சாமுவேலின் உடல் வலிமையை உணர்ந்த சிமியோன் அவனோடு சண்டைசெய்யத் தன்னால் இயலாதென்பதையறிந்து, திடுதிடுவென்றோடி ஒரு கல்லை எடுத்து சாமுவேல் தலையில் குறிபார்த்து எறிந்தான். இதைக்கண்ட சாமுவேல் அக்கணமே சிறிது குனிந்தான்; எறிந்த கல் அவன் தலைக்குமேல் பறந்துபோயிற்று. உடனே அவன் சிமியோனைப் பிடித்து ஓர் அறைகொடுக்க முன் ஓடிவந்தான். சிமியோன் ஓட்டம் பிடித்தான். சாமுவேல் அவனைத் தொடர்ந்தான். ஏறக்குறைய முந்நூறு அடி இருவரும் ஓடினார்கள். அங்கே ஒரு பெரும் பாதையில் மக்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். முன்னே ஓடிய சிமியோன் வாயால் சொல்லத்தகாத இழிவான சொற்கள் கூறிச் சாமுவேலை வைதான். சாமுவேலின் நெஞ்சம் பதைத்தது. சிமியோனை ஒரே பிடியாகப் பிடித்து நசுக்கிவிடவேண்டுமென்று அவனுடைய கைகள் துடித்தன. ஆனால், அப்பொல்லாச் சிறுவன் குறுக்குச் சந்துகளின் வழியாக ஓடிவிட்டான். அவன் வாயிலிருந்து வந்த வசைமொழிகள் சாமுவேலின் மனத்தைப்

புண்படுத்தின. இனி, அவனைப் பின்தொடர்ந்து போவதிற் பயனில்லை என்று நினைத்துச் சாமுவேல் நின்றுவிட்டான். இந்த நிலையில் பள்ளியில் மணியடிக்கும் ஓசை இவன் காதிற்பட்டது.



கோபத்தாற் புழுங்கிய நெஞ்சுடையவனாய், சாமுவேல் பள்ளிக்குப்போகத் திரும்பினான். இவ்வேளையில் சிமியோன் தூரத்தில் வந்து நின்றுகொண்டு வசைமொழிகளைச் சரமாரியாய்ப் பொழிந்தான். சாமுவேல் அடைந்த எக்கத்தை எடுத்துரைக்க நம்மால் இயலாது. ஆயினும் அவன் பள்ளிக்குத் தவறாமல் போகின்றவனாகையால், கோபத்தை யடக்கிக்கொண்டு, சிமியோனைத் தொடர்வதைவிட்டுத் தன்வழியே சென்றான்.

அன்று வகுப்பில் உபாத்தியாயர்கள் கற்றுக் கொடுத்த பாடங்கள் ஒன்றும் சாமுவேல் செவியிலேறவில்லை. உள்ளே பொங்கிய ஆறாச்சினத்தால் அவனுடைய கண்களும் முகமும் சிவந்திருந்தன. சிமியோ

னுடைய கழுத்தைப் பிடித்து இறுக்கவேண்டுமென்ற நினைவு அடிக்கடி வர, வகுப்பிலிருந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாமையால் உதட்டை மென்றான். மிக நெருங்கிய நண்பர்களுடனும் அவன் ஒன்றும் பேசவில்லை. இடைப்பகல் பள்ளி முடிந்தபொழுது அவனுடம்பு காய்ந்தது. அவன் வழக்கமாய் மாலையில் பள்ளிக்கூடம் முடிந்ததும் தன் தோழர்களுடன் பந்தாடச் செல்வதுண்டு; இன்று மாலை அப்படிச் செல்லாமல் தனித்து நின்றான். தோழர்கள் அவனுடைய வாடிய முகத்தைக் கண்டு, "என்ன நேர்ந்தது, சாமுவேல்? உன் முகம் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன? உளத்திலிருப்பதை எங்களுக்கு வெளிப்படுத்தமாட்டாயா?" என்று அன்பு கூர்ந்து வினவினர். அப்பொழுது அவன் அன்று காலை நடந்தவற்றைச் சிறிது கூறினான். இதைக் கேட்டவளவில் ஒரு நண்பன், "சிமியோனா இப்படிச் செய்தான்? எனக்கு நீ உத்தரவு கொடு; உதைமேல் உதை கொடுத்து அவனை உன்முன் கொண்டு நிறுத்துகின்றேன்," என்று பதறினான். மற்றொருவன், "சரி, சரி, இதற்காகவா நீ இவ்வளவு வருந்தவேண்டும்? நாளைப்பொழுது வரட்டும், நான் அவனைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறினான். வேறுசிலர், சிமியோனின் பல்லை யுடைத்துவிடுவதாகவும் எலும்பை முறித்துவிடுவதாகவும் வஞ்சினங் கூறினார்கள். சாமுவேல் அவர்களை நோக்கி, "நண்பர்களே, இதில் நீங்கள் யாருந் தலையிடக்கூடாது, நானே இப்பழியைத் தீர்ப்பேன்," என்று மொழிந்து அவ்விடம் விட்டகன்றான்.

இரவாயிற்று, சாமுவேல் வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் உன்மத்தம் பிடித்தவனைப்போலவே தோன்றினான். சாமுவேலின் அன்னையார் அவன் முகத்தைப் பார்த்து, அவன் உள்ளத்தில் ஏதோ தாங்கொணாத்

துன்பம் இருப்பதைக் கண்டார். இரவில் உணவிற்கு முன் அன்னையும் மகனும் இறைவனைத் தொழுவது வழக்கம். தொழுகையின் முடிவில் கிறிஸ்துபெருமான் தம் அடியவர்க்கு உபதேசித்த ஜெபத்தை இருவரும் சேர்ந்து சொல்லுவார்கள். இந்த ஜெபத்தில், "பிறர் குற்றம் யாம் பொறுக்குமாறு, இறைவா! எம்பிழை பொறுத்திடுக," என்று பொருள்படும் ஒரு வாக்கியம் வருகிறது. அன்றிரவு சாமுவேல் இந்த வாக்கியத்தைச் சொல்ல மனமில்லாமல் விழித்தான். அவ்வார்த்தை களின் பொருள் இன்றுதான் அவனுக்கு விளக்கமா யிற்று. அவன் வேண்டாவெறுப்பாக உணவருந்திப் படுத்துக்கொண்டான். இரவு முழுவதும் அவன் இரு புறமும் படுக்கையிற் புரண்டு, "பிறர் குற்றத்தை யாம் பொறுப்பதுபோல்" என்று சொல்லிக்கொண்டே யிருந் தான். அவனுடைய உள்ளம் சற்றும் அமைதிபெற வில்லை. "ஒரு குற்றம் எனக்குச் செய்த இச்சிமியோனை யான் மன்னிக்க உடன்படாவிடில், பல பாவங்கள் செய் யும் என்னை மன்னிக்கும்படி இறைவனை எப்படி நான் வேண்டிக்கொள்வேன்?" என்று சாமுவேல் அழுதான். சிமியோனைத் தண்டிக்க வேண்டுமென்ற ஆவல் ஒரு பக்க மும், இறைவனிட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டு மென்ற விருப்பம் ஒரு பக்கமும் அவனுள்ளத்தில் எழும் பிப் போராடின.

பொழுது விடிந்தது. இரவெல்லாந் தூக்கமில்லாது வருந்திய சாமுவேலின் முகத்தில் இப்பொழுது அமைதி தோன்றிற்று. அவன் ஒன்றும் பேசாமல் பல்லைத் துலக்கிக்கொண்டு வெளிச்சென்றான். சிமியோனுடைய வீட்டிற்கு நேரே நடந்து வாயிலருகே வந்து நின்றான். சிமியோனுடைய தகப்பனார் சாமுவேலைப் பார்த்து, "அப்பா, என்ன விஷயமாய் வந்தாய்?" என்று கேட்க,

"நான் சிமியோனைப் பார்க்கவேண்டும்," என்று மிக அமைதியுடன் பதில் சொன்னான். உள்ளிருந்த சிமியோன் சாமுவேலின் குரலைக் கேட்டுப் பதுங்கிக்கொண்டான். அவனுடைய தகப்பனார் அவனைக் கூப்பிட்டும் அவன் வெளிவரவில்லை. அவனைப் பார்க்க அவர் உள்ளே சென்றார். தன் தந்தையைக் கண்டு சிமியோன், மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தான். தகப்பனாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. இதற்குள் சாமுவேல் உள்ளே வந்து அழுகின்ற சிமியோனை அணைத்துப் பிடித்து, "பிறர் குற்றத்தை யாங்கள் பொறுப்பதுபோல், இறைவனே, எம் பாவம் மன்னியும்" என்றான்.

### குறிப்புகளும் வினாக்களும்

| | | |
|---|---|---|
| உடல் | + கட்டு | = உடற்கட்டு |
| கால் | + பந்து | = காற்பந்து (Football) |
| விழியில் | + பெருகிய | = விழியிற்பெருகிய |
| கையில் | + கொடுத்தான் | = கையிற்கொடுத்தான் |
| போவதில் | + பயனில்லை | = போவதிற் பயனில்லை |
| காதில் | + பட்டது | = காதிற்பட்டது |
| படுக்கையில் | + புரண்டு | = படுக்கையிற்புரண்டு |

சிமியோன் கல்லெறிந்தபொழுது சாமுவேல் குனிந்து நிற்பதைப் படத்திற் பாருங்கள். கோலியாடிய சிறு பிள்ளைகள் இதைக் கண்டு என்ன செய்கிறார்கள்? கோபத்தை யடக்குவது எளிதா? நம்மை விடத் தாழ்ந்தவர்கள் செய்கின்ற குற்றத்தைப் பொறுப்பதரிது. சிமியோனைவிட சாமுவேல் வலிமையுடையவனாயிருந்தும், அவனைத் தண்டிக்காமல் விட்டது புகழத்தக்கதொரு செய்கையல்லவா?

---

## 17. தீமைக்கு நன்மை

தண்ணளி மிகுந்த தென்னா டதனில்
பொன்னூ ரென்று புலவர் போற்றும்
சீர்பெறு மூரில் சிறக்கவே வாழ்ந்த
ஏர்மிகு முத்த னென்றெல் லோரும்

சொல்லு மொருவ னிருந்தன னவனிடம்
முனிய னென்போன் வந்தனன் ஒருநாள்.
வந்த முனியன் முத்தனென் பவனைக்
கண்டு, "இன்றிரா காக்கவே வேண்டும்,
கொலையாம் பெரிய கொடுந்தொழில் செய்து
மறைவாய் வந்தேன், முத்தனே," என்றான்.
முனிய னுரைத்ததை முத்தனுங் கேட்டுக்
"கனிவாய் எனக்குக் கடவுள் கொடுத்த
வீட்டி லிருப்பாய் காப்பேன்," என்றான்.
கேட்ட முனியனும் கேடிலா தன்று
இரவைக் கழித்துக் காலை வந்து,
"கரவா யுன்றன் காதல் மகனைக்
கொன்றவன் யானே கோபிக் காதீர்"
என்றே அவனு மியம்பினன், அதனை
முத்தன் கேட்டு, முனிவில்லாமல்,
"உண்மை யுரைக்கு முன்றனக் கியானும்
செய்த உதவி சாலா ததனால்
ஐயா யிரம்பண மளித்தே னுனக்கு,
எடுத்துக்கொண்டு பின்னர் ஏகுவாய்," என்றான்.
"எங்கும் நிறையு மிறைவ, என்றன்
மகனைக் கொன்றே மதியிலா னுக்குத்
'துன்பே செய்வார்க்கும் நன்மை செய்க'
என்றே உமது வேதங் கூறும்,
அதனால் யானு மளித்தனன் அவற்கு;
அவன் செய்பாவ மனைத்தும் நீக்கிக்
காப்ப துன்றன் கடமை யாகும்,"
என்றே முத்த னினிதுவாழ்ந் தனனே.

## 18. மனோன்மணீயம்

திருவாங்கூர் நாட்டில் தோன்றிக் கிழக்கே சென்று திருநெல்வேலி ஜில்லாவைச் செழிக்கச்செய்யும் தாம்பிர வர்ணி ஆற்றைப்பற்றியும் அருணோதயத்தைப்பற்றியும் சுந்தரம் பிள்ளையவர்கள் தாமியற்றிய 'மனோன்மணீயம்' என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்:—

### 1. தாம்பிரவர்ணி

"அமிழ்தினுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையம் நின்றிழிந்து, விலையுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக் காழகிற்
சந்தன டவியுஞ் சாடி வந்துயர்
குங்குமம் முறித்துச் சங்கினம் அலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி
இருகரை வாரமுந் திருமகள் உறையுளாப்
பண்ணுமிப் புண்ணிய தாமிர வர்ணியும்,"

அமிழ்தினுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த மலையம் நின்றிழிந்து = பொதியை மலையிலிருந்து வழிந்து (தமிழ் மொழி பிறந்த மலையம் என்பது எதற்கெனின்? தமிழ் மொழி வளர்த்த அகத்தியர் அங்கிருந்தார் என்பதனால்).

விலையுயர் முத்தும் வேழவெண் மருப்பும் வீசி = விலை மிகுந்த முத்துக்களையும் யானையினது வெண்மையான தந்தத்தையும் கொண்டுவந்து வீசி.

காழகிற் சந்தனடவியுஞ் சாடிவந்து = வயிரமேறிய அகிற்காட்டையும் சந்தனக்காட்டையும் கடந்து.

உயர்குங்குமம் முறித்து = குங்கும மரங்களை முறித்து இழுத்துக்கொண்டு.

சங்கினம் அலறும் தடம்பணை தவழ்ந்து = சங்குகள் இரைச்சலிடுகின்ற பெரிய வயல்களில் வழியச் சென்று.

மடமயில் நடம்பயில் வளம்பொழில் கடந்து = இளமையான மயில்கள் நடனஞ்செய்கின்ற செழித்த சோலைகளைக் கடந்து.

குளம் பல நிரப்பி = பல குளங்களை நிறையச் செய்து.

இருகரை வாரமுந் திருமகள் உறையுளாப் பண்ணும் = இருகரையின் பக்கங்களையும் இலக்ஷ்மி வாழுமிடமாகச் செய்கின்ற (இலக்ஷ்மி வாழுமிடமென்பதற்குச் செல்வம் நிறைந்த இடம் என்பது பொருள்).

இப்புண்ணிய தாமிரவர்ணியும் = மக்களுக்குப் பல வகையிலும் நன்மை செய்கின்ற இந்தத் தாம்பிரவர்ணி யாறும் (தாம்பிரவர்ணி என்பது செம்பின் நிறத்தை யுடையது).

---

## 2. அருணோதயம்



''பரிதியி னுதயம் பார்க்கக் கருதில்
இவ்விடஞ் சாலவு மினிதே; உதயஞ்
செவ்விதிற் கண்டு பின் செல்வோம்.
ஓவியத் தொழில்வலோன் நீவியக் கிழியில்
தீட்டுவான் புகுந்த சித்திரம், நீட்டும்
தூரியந் தொடத்தொடத் துலங்குதல் போல,

சூரியன் பல் நிறக் கதிர்கள் தொடத்தொட
உருவு தோன் ருவணம் ஒன்ருய்ச் செறிந்து
கருகு இருள் மயங்கிய காட்சி கழிந்து
சிறிது சிறிதா உறுப்புகள் தெளியத்
தோன்றுமித் தோற்றம் நன்றே."

பரிதியினுதயம் பார்க்கக் கருதில் இவ்விடஞ் சாலவு மினிதே=சூரியனுடைய வருகையைப் பார்க்க நினைத் தால், இவ்விடம் மிகவும் ஏற்றது.

உதயஞ் செவ்விதிற் கண்டு பின் செல்வோம்=சூரி யன் எழுகின்ற அழகை நன்கு நோக்கி அப்பாற் செல் வோம்.

ஓவியத் தொழில்வலோன்=சித்திரமெழுதுவதில் சிறந்த ஒருவன்.

நீவியக் கிழியில்=ஒரு துணியில்.

தீட்டுவான் புகுந்த சித்திரம்=எழுதத் தொடங்கிய சித்திரம்.

நீட்டுந் தூரியந் தொடத்தொடத் துலங்குதல் போல=அவனுடைய கையிலிருந்து நீளுகின்ற சித்திரக் கோல் துணியில் படப்பட விளக்கம் பெறுதல்போல;

சூரியன் பல்நிறக் கதிர்கள் தொடத்தொட=சூரிய னுடைய ஏழு நிறம் கலந்த கதிர்கள் வீசவீச.

உருவு தோன்ருவணம் ஒன்ருய்ச் செறிந்து=வடிவம் வெளிப்படாத வகையில் யாவும் ஒன்ருய்த் திரண்டு.

கருகு இருள் மயங்கிய காட்சி கழிந்து=மிகுந்த இருள்கூடிய தன்மை நீங்கி.

சிறிது சிறிதா உறுப்புகள் தெளிய=கொஞ்சம் கொஞ்சமாக வடிவங்கள் தெளிவுபெற.

தோன்றுமித் தோற்றம் நன்றே=தோன்றுகின்ற இந்த சூரியனுடைய காட்சி அழகியதே.

சூரியனுடைய ஒளி அதிகரிக்க அதிகரிக்க இருளில் உருவந்தெரியாது இருக்கும் பொருள்களெல்லாம் சிறிது சிறிதாய் நமது பார்வைக்கு விளங்குவது, சித்திரம் ஒருவன் எழுதுங்கால் முதலில் தெரியாதிருக்கின்ற உருவம் அவனுடைய எழுதுகோலால் வரைய வரைய வெளிப்படுவதுபோலிருக்கிறதென்று இங்குக் கூறியுள்ளது.

---

## 19. நகையும் நாணயமும்

### மணிக்கும் சுவாமிநாதனுக்கும் நடந்த சம்பாஷணை

ஒரு நாள் சென்னையில் வசிக்கும் மணி என்பவன் ஐந்நூறு ரூபாய் எடுத்துக்கொண்டுபோய்த் தன் மனைவிக்குச் சில நகைகளை வாங்கி உவகை நிறைந்த உள்ளத்தவனாய் மின்சாரவண்டியிலேறி வீடு திரும்பினான். இடையில் அவனது நண்பன் சுவாமிநாதன் வந்து அவ்வண்டியில் ஏறினான். இருவரும் ஒருவரையொருவர் க்ஷேமம் விசாரித்தபின், மணி தான் வாங்கிய நகைகளைப்பற்றிக் கூறத் தொடங்கினான். பிறகு அவர்களிருவரும் பின்வருமாறு சம்பாஷித்தார்கள்:—

"நமது பெண்களுடைய கழுத்திலுங் காதிலும் நிறைய நகையிருக்கவேண்டும்; நமது கையில் முட்டின்றி நாணயமிருக்கவேண்டும்; நகையும் நாணயமுமிருந்தால் தான் நாகரிகமான வாழ்க்கை நடத்த முடியும்" என்றான் மணி.

"நீ சொல்வது உண்மையே" என்று பொருள்படும் வகையில் சுவாமிநாதன் தலையை ஆட்டினான்.

"பார்வைக்கு நகையும் செலவிற்கு நாணயமும் இருந்துவிட்டால் வேறு கவலையே யில்லை" என்று மணி மொழிந்தான்.

அவன் மிகக் களிப்போடு மொழிந்ததை சுவாமி நாதன் அமைதியாகக்கேட்டு, "நகை மிக நல்லது; அதனி னும் நல்லது நாணயம்" என்று கூறினான்.

"அதற்கென்ன ஐயம்? நாணயமிருந்தால் நகை வாங்கிக்கொள்ளலாம். நகையை விற்று நாணயமாக மாற்றுவது சிறிது வருத்தந்தான். அதற்காகத்தானே நகையைவிட நாணயம் நல்லது என்று நீ சொல் கின்றாய்?"

"நான் சொல்வதன் அர்த்தத்தை நீ அறிந்துகொள்ள வில்லை, மணி. நான் கூறுகின்ற நகை வேறு, நாணயமும் வேறு."

"சுவாமிநாதா, நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை உன் மனத்திலிருப்பதைத் தெளிவாகச் சொல்."

"மணி, நீ நினைப்பது பொன் நகை, கல் நகை; நான் சொல்வது சிறு நகை, பெரு நகை."

"உனக்குப் பித்தம் பிடித்துவிட்டதா, சுவாமிநாதா? சிறு நகையாயிருந்தாலென்ன, பெரு நகையாயிருந்தா லென்ன? இரண்டும் நகைதானே. நீ சொன்ன வேறு நகை என்ன?"

"சிறு நகை என்பது இளஞ்சிரிப்பு, அல்லது புன் முறுவல்; பெரு நகை என்பது பலர் கேட்கச் சிரிப்பது."

"ஓ, கோ, கோ! அப்படியா? நீ என்னைக் கேலி செய்ய ஆரம்பித்துவிட்டாய்."

"இல்லை, உண்மையை உனக்கு உணர்த்தவேண்டு மென்றுதான் நான் பேசுகின்றேன். நகை அல்லது சிரிப்பு என்பதில்லாவிட்டால் நமது வாழ்க்கையே பெரிய பாரமாகிவிடும். உலகிலுள்ள கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு சந்தோஷம் என்பதில்லாமல் வாழமுடியுமா? இந்தப் பொருளில்தான் நான் 'நகை நல்லது' என்று கூறினேன்."

இது கேட்ட மணி சிறிது நேரம் சிரித்து, "சுவாமி நாதா, நீ சொல்வது முழுவதும் சரி. 'நகையைக் காட்டிலும் நாணயம் நல்லது,' என்று நீ சொன்னதன் பொருளென்ன?" என்று கேட்டான்.

"நாணயம் என்பது சொன்னசொல் தவறுமல் வாழ்க்கை நடத்துவதாகும். ஒருவன் சொன்னசொல் தவறுமல் நடந்துகொள்வதைப் பார்த்து, 'அவன் நாணயமாய் நடந்துகொள்ளுகிறுன்' என்று நாம் பேசுவதில்லையா?"

"ஆம், ஆம், நாணயம் என்பதற்கு அந்தப் பொருளுமுண்டு" என்று மணி கூற,

"தோழா, பொன்னுலும் வெள்ளியாலுஞ் செய்த நகைகளையும் நாணயங்களையும் பெரிதாக மதிக்கவேண்டாம். முகத்தில் நகையும், உள்ளத்தில் நாணயமும் வேண்டும். இதையறிந்து நல்வாழ்க்கை நடத்துவாயாக" என்று சுவாமிநாதன் தன் நண்பனுக்கு அறிவு புகட்டினுன்.

---

## 20. நெருப்பு

முதன் முதல் இவ்வையகத்திலிருந்த மக்கள் கல்லாற் செய்த முரட்டுக் கருவிகளையுடையவர்களாய் வேட்டையாடி உணவு தேடிக்கொண்டார்களென்று உலக சரித்திரத்தாலறிகின்ருேம். அவர்கள் வழங்கிய கல்லாலாய கருவிகள் இன்றளவும் ஆங்காங்குத் தோண்டியெடுக்கப் படுகின்றன. அக்காலத்திலிருந்த மக்கள் நெருப்புண்டாக்கவும், அதைப் பயன்படுத்திக்கொள்ளவுந் தெரியாதவர்களா யிருந்தார்கள். ஆனுல், அவர்களைச் சுற்றி அவ்வப்போது நெருப்புப் பற்றி எரிவதை அவர்கள் கண்டார்கள். உயர்ந்து வளர்ந்த மரங்களில் இடிவிழுந்து நெருப்புப் பற்றுவதையும், எரிமலைகளின் வாயிலாய் நெருப்பு வெளிப்படுவதையும் அவர்கள் பார்த்திருப்பார்

கள். சிலவேளைகளில் பெரிய காடுகளில் காய்ந்துபோன மரக்கிளைகள் ஒன்றோடொன்று உராய்வதால் தீப்பிடிப்பதும் அவர்கள் பார்வைக்கெட்டியிருக்கும். கற்கள் ஒன்றோடொன்று மோதுவதாலுண்டாகும் நெருப்புப் பொறியை அவர்கள் நோக்கியிருப்பார்கள். இக்காட்சிகளை உற்றுநோக்கிய ஓர் அறிவுடைய மகன் காய்ந்த ஒரு கட்டையின்மேல் மற்றொரு கட்டையைத் தேய்த்து நெருப்புண்டாக்கி மற்றவர்களுக்குக் காட்டியிருப்பான். மற்றொரு மகன் சக்கிமுக்கிக் கற்களினுதவியால் அனலுண்டாக்கக் கற்றுக்கொண்டிருப்பான். இங்ஙனம் பழைய காலங்களில் முதன் முதல் மக்கள் நெருப்பைத் தாங்கள் வேண்டியபோது உண்டாக்க வழி தேடிக் கொண்டார்கள். இந்த முறைகள் முற்காலத்திலிருந்து ஏறக்குறைய 150 வருஷங்களுக்கு முன்னுங்கூடக் கையாளப்பட்டுவந்தன. 19-வது நூற்றாண்டின் மத்தியில் தான் தீக்குச்சி செய்யும்முறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுது மிக எளிதாக நாம் விரும்பியபொழுது நெருப்பைப் பற்றவைக்க நாம் கற்றுக்கொண்டதால் தீயை நாம் வெகு சாதாரணமாக நினைக்கிறோம்.

முற்காலத்திலிருந்தவர்கள் நெருப்பைச் சாதாரணமானதென்று நினைக்கவில்லை. சிலர் அது தெய்வலோகத்திலிருந்து வந்ததென்று கருதினார்கள். வேறு சிலர் அது இறைவனால் கொடுக்கப்பட்டதென்று எண்ணினார்கள். மற்றுஞ் சிலர் அதை ஒரு தெய்வமென்றே கொண்டாடினார்கள். இவ்வாறெல்லாம் அவர்கள் நினைத்தது, அது பெரிதும் வியக்கத்தக்கதும் பயன்படக்கூடியதுமாகிய ஒரு பொருளென்று அவர்களுக்குத் தோன்றியதனால் தான். இதைக்குறித்துப் பிறகு பார்ப்போம்.

நெருப்புண்டாக்கக்கற்றபின் மக்களுடைய வாழ்க்கை சிறிது சிறிதாகத் திருத்தம் பெறத்தொடங்கிற்று.

கிழங்கு, தானியம் முதலியவை நெருப்பிற் பட்டபின், வேறு சுவையுடையனவாகவும், உண்பதற்கு எளியனவாகவுமிருப்பதை மக்கள் பார்த்தார்கள். இதிலிருந்து பச்சையுணவைவிட்டுச் சமைத்துச் சாப்பிடுதலை மக்கள் பின்பற்றினார்கள். கொஞ்சங் கொஞ்சமாக, வேகவைத்தல், வாட்டல், புழுக்கல் முதலிய சமையல் வேறுபாடுகளெல்லாந் தோன்றின. இக்காலத்தில் வாழ்கின்ற நாம் பல்வேறு வகைகளில் பதஞ் செய்யப்படுகின்ற உணவுகளையும் பானங்களையும் அருந்துகின்றோம். இவற்றிலெல்லாம் நெருப்பின் துணை வேண்டப்படுகின்றது. பிட்டு, இட்டலி முதலிய மாப்பண்டங்கள் நீராவியில் சமைக்கப்படுகின்றன. நீராவியை யுண்டாக்குவதற்கும் நெருப்பு வேண்டும்.

சோறு சமைக்குங்கால் நீரிலிருந்து வருகின்ற ஆவி, உலைமூடியைத் தூக்கும் வலிமையுடையதா யிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பல்லாயிர வருஷங்களாக மக்கள் இந்நிகழ்ச்சியைப் பார்த்துவந்தார்கள். சமையல் செய்வதில் தோன்றும் இந்த நிகழ்ச்சியை ஓரிளமகன் ஊன்றிநோக்கி ஆராய்ந்ததால் நீராவி இயந்திரங்கள் முதல் முதல் செய்யப்பட்டன. ரயில்வண்டிகளுங் கப்பல்களும் இக்காலத்தில் நீராவியின் வலிமையாலேயே செலுத்தப்படுகின்றன வென்பதை நாமறிவோம். நூல் நூற்கின்ற ஆலைகளுந் துணி நெய்கின்ற ஆலைகளும் இன்னும் பலவித ஆலைகளும் நீராவியின் துணைகொண்டே நடத்தப்படுகின்றன. இது சமையல் தொழிலிலிருந்து பிறந்ததென்பதை நாம் மனத்தில் வைக்கவேண்டும். நீராவியின் உதவியின்றி எண்ணெயால் இயக்கப்படுகின்ற மோட்டார்வண்டிகளும் ஆகாய விமானங்களும் இப்பொழுது எங்கே பார்த்தாலும் ஓடுகின்றன. இவற்றிற்கும் நெருப்பினுதவி வேண்டியதாயிருக்கின்றது. எவ்

வாறெனின், மோட்டார்வண்டியில் ஊற்றப்படுகின்ற எண்ணெய் ஆவியாக மாற்றப்பட்டு, மின்சார சக்தியால் பிறக்கின்ற நெருப்புப்பொறியாற் சுடப்படுவதாலேயே இந்த ஓட்டமுண்டாகின்றது. இங்ஙனம், ஓரிடத்தி லிருந்து மற்றோரிடத்திற்கு நம்மைக் கொண்டுபோகும் சகலவித இயந்திரங்களும் கைத்தொழில் செய்வதற்கு உதவுகின்ற ஆலைகள் பலவும் நெருப்பினுதவியாலேயே இயக்கப்படுகின்றன. மக்களிருந்த நிலையிலிருந்து நாம் முன்னேறியிருப்பது பெரும்பாலும் இத்துறைகளிலே தான். நெருப்பால் இந்த வையகம் மாற்றப்பட்டிருக் கின்றதென்பது உண்மை.

இனி வேறொரு வகையில் நெருப்பால் மக்கள் பெரும் பயனடைந்தமை பார்ப்போம். நெருப்பை வழங்கக் கற்றுக்கொண்ட பிறகுதான், மண்ணிற் கலந்திருக்கின்ற உலோகங்களை உருக்கி எடுக்க மக்களறிந்தார்கள். உலோகங்களை மண்ணிலிருந்து பிரித்தெடுக்கத் தொடங் கியபின் உலோகத்தாலமைக்கப்பட்ட கருவிகளை மக்கள் செய்யலானார்கள். இவ்வாறு அக்கினியினுதவியால் கல் லாற்செய்த கருவிகளை யுபயோகித்த நிலையிலிருந்து நீங்கி, உலோகங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் உயர்ந்த நிலைமைக்கு வந்தார்கள். செம்பு, கிண்ணி, தவலை முத லிய கலங்களை அவர்களுபயோகித்தது நெருப்பைக் கண்டுபிடித்தபிறகே. அழகிய மண்பாண்டங்களும் நெருப்பின் துணையின்றி அமையாவென்பதை யறிந்து கொள்க. முதன் முதலில் மனிதர் கண்டுபிடித்த உலோ கங்கள் செம்பு தகரம் முதலியவையேயாம். செம்பை யுந் தகரத்தையுங் கலந்து ஒரு கலப்பு உலோகமுண் டாக்கி, அதிலிருந்து கத்தி, வேல் முதலிய படைக்கலங் களையும் முற்காலத்து மக்கள் செய்தார்கள். இதிலிருந்து பல நூற்றாண்டுகள் சென்றபிறகு இரும்பைக் கண்டு

பிடித்துப் பெருக வழங்கலாயினர். இன்றளவும் இரும்பி னுபயோகம் பெருகிக்கொண்டே போகின்றது. தாற்றுக் கோல்முதல், எழுதுகோல்வரை எத்தனையோ விதமான கருவிகளாக்குதற்கு இரும்பு பயன்படுகின்றது. நெருப்பி விடாமல் இரும்பை நாம் நினைத்தவாறு அமைத்த லாகுமோ?

இனி, மற்றொரு வகையில் நெருப்பு மக்களுக்குப் பேருதவி செய்திருப்பதைப் பார்ப்போம். முதன் முத லில் மனிதர்கள் பெரும்பாலும் சூரிய வெப்பம் அதிகமா யிருக்கும் நிலப்பகுதிகளிலேயே வசித்துவந்தார்கள். மிகப் பழைய காலங்களில் குளிர் மிகுந்த விடங்களுக்குப் போய் மக்கள் குடியேறவில்லை. நெருப்பைக்கொண்டு தங்களுக்கு வேண்டிய வெப்பத்தை உண்டாக்கிக் கொள்ளலாமென்பதைக் கண்டபிறகே, அவர்கள் உறை பனியும், மழையும் மிகுந்த நிலப்பகுதிகளிற் போய்க் குடியேற வசதியுண்டாயிற்று. இதனால் பூமியின் எல் லாப் பாகங்களிலும் மனிதர் பரவினார்கள். குளிர்மிகுந்த பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளிலெல்லாம் வெப்பமுண்டாக்குதற்குரிய வழிகள் இன்னுங் கையா டப்பட்டு வருகின்றன. அங்குள்ள மக்கள் நெருப் பருகே அமர்ந்து இனிதாகப் பொழுதுபோக்குங் காட்சி நூல்களிலெல்லாம் கூறப்படுகின்றது. நெருப்பின் உதவி யாலேயே வையகத்தில் பாழாய்க்கிடந்த பல பகுதிகள் மக்களால் நிரப்பப்பட்டனவென்பதை நாம் மறத்த லரிது.

நெருப்பு மக்களுக்கு உதவியாயிருந்ததுபோலவே, விரோதியாகவும் எக்காலத்திலுமிருந்திருக்கிறது. இந்த நாளிலும் ‘தீ’ என்ற குரல் எவரையும் அஞ்சி நடுங் கச் செய்கிறது. ஆண்டாண்டுதோறும் உலகெங்கும் காடுகளும் வீடுகளுந் தீயாலழிக்கப்படுவதால் கணக்கற்ற

பொருள் நஷ்டமாகிறது. இயற்கையாக இந்த வகையில் நேர்கின்ற சேதம் ஒருபுறமிருக்க ஆதிமுதற்கொண்டே மக்கள் ஒருவரையொருவர் அழிக்கும்பொருட்டு நெருப்பை வழங்கி வந்திருக்கின்றார்கள். பழைய காலத்தில் பெருஞ் சண்டைகள் நிகழ்ந்தபோது வெற்றியடைந்தோர் தோல்வியுற்றோரின் நாட்டை நெருப்பாலழித்ததுண்டு. இங்ஙனம் செய்வதை அவர்கள் பெரிய கௌரவமாகக் கருதினார்கள்.

"வாடுக இறைவ நின்கண்ணி ஒன்னார்
நாடு சுடுகமழ் புகை எறித்த லானே"

என்று காரிகிழார் என்ற புலவர், பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்ற பாண்டிய மன்னனைப் பாடியிருக்கின்றார். இதன் பொருளென்னவெனின்:—

"மன்னவனே, நீ தலையிற் சூடுகின்ற பூமாலை பகைவர்களுடைய நாட்டை நீ சுடுகின்றபொழுது எழுகின்ற பல மணமுடைய புகைவந்து படுதலால் வாடுவதாக."

இறைவ = மன்னவனே, நின்கண்ணி = நீ தலையிற் சூடுகின்ற மாலை, ஒன்னார் = பகைவருடைய, நாடு = நாட்டை, சுடு = சுடுகின்ற, கமழ்புகை = பற்பல மணமுடைய புகை, எறித்தலானே = உறைத்தலால், வாடுக = வாடுவதாக.

(புறநானூறு: 6-வது செய்யுள்: வரி: 21, 22)

இப்படி முற்காலத்தில் போர் நிகழ்ந்தபொழுது நடந்தது. இன்னும் இவ்வழக்கம் நின்றபாடில்லை. முன்னாளில் நெருப்பைக்கொண்டு சுட்டதுபோக, இப்பொழுது துப்பாக்கியைக்கொண்டு சுடும் வழக்கம் வந்துவிட்டது. துப்பாக்கி சுடுவதிலும் நெருப்பினுதவி வேண்டப்படுகின்றது. இக்காலத்துப் போர்களில் பெரிதும் வழங்கப்படுகின்ற பலவித வெடிகுண்டுகளெல்லாம் நெருப்போடு

பொருந்தியவையே. வெடிகுண்டுகள் வெடிமருந்துகள் முதலியவையெல்லாம் ரசாயன சாஸ்திர (Chemistry) முறையைத் தழுவிச் செய்யப்படுகின்றன என்பது கருதத்தக்கது. இந்த சாஸ்திரமும் நெருப்பினுதவி யின்றி நடந்திருக்காது.

இதுவரையில் நாம் நெருப்பின் வெப்பத்தை மாத்திரம் பார்த்தோம். அதன் ஒளியைப்பற்றி நாம் பேசவில்லை. நெருப்பினொளியை மக்கள் விளக்கேற்றி, பயன்படுத் திக்கொள்ளுகின்றார்கள். முதன் முதலில் விளக்கேற்றி வைக்கப்பட்ட வீடு எவ்வளவு அழகாய் விளங்கியிருக் கும்! இரவுப்பொழுதில் நிலவைத்தவிர வேறு வெளிச்ச மில்லாத காலத்தில் விளக்கென்பது ஓர் அதிசயமாகத் தோன்றியிருக்கு மல்லவா? விளக்கு என்ற சொல்லே ஓர் அழகிய சொல். "விளங்கவைப்பது" என்பது அதன் பொருள். நம்முடைய மனத்தில் ஒன்று தெளிவாகத் தெரியாவிட்டால் "அது விளங்கவில்லை" என்று சொல்லு கின்றோம். வெளிச்சமில்லாதபொழுது ஒன்றும் விளங் காது. விளக்கேற்றிப் படித்தன்றோ நாம் நம்முடைய அறிவை வளர்க்கின்றோம். இங்ஙனம் அறிவு விர்த்தியாவ தற்கும் நெருப்புத் துணை செய்துளது. மலையின்மேல் ஏற்றப்பட்ட விளக்கைப்போ லிருக்கவேண்டுமென்று கிறிஸ்துபெருமான் தமது அடியவர்க் கெடுத்துரைத்தார். மாணவர்களே! நீங்களும் அறியாமையைப் போக்குகின்ற விளக்குகளாய் விளங்குங்கள்.

வெப்பமும் வெளிச்சமும் ஒருங்கே அமையப்பெற்ற நெருப்பு, தெய்வத்தோடு பொருத்தமுடையதென்ற நினைவு முற்காலத்திலேயே மனிதருள்ளத்தில் தோன் றிற்று. இதுபற்றிக் கடவுளை நெருப்பின் வாயிலாகத் தொழுகின்ற வழக்கமேற்பட்டது. இறைவனுக்குச் செலுத்துகின்றவற்றை நெருப்பிலிட்டால் அது எங்ஙன

மாகவோ இறைவனைச் சேருமென்று மக்கள் நம்பினார்கள். இக்காலத்தில் நாம் பெரும்பாலும் இதைப் பார்ப்பதில்லை. ஆயினும், ஆங்காங்கு இது இன்னும் நிகழ்கின்றது. இஃதொரு புறமிருக்க, கோவில்களில் தொழுகை நடக்கும்பொழுது பகற்பொழுதாயினும் விளக்கேற்றி வைப்பதை நாம் காண்கின்றோம். நெருப்பு தெய்வத் தன்மை யுடையதென்று மக்கள் கருதினதற்கு இஃதொரு சான்றாகும். மற்றும், நெருப்பையே கடவுளாகத் தொழும் ஒரு சமயமும் உண்டு. இந்துக்களுடைய கலியாணங்கள் நெருப்பின் முன்னரே நடைபெறுகின்றன. இதை ஹோமத்தீ என்பர். இவ்வாறு மக்களுடைய வணக்கத்தோடு நெருப்பு இன்றளவும் பொருந்தியிருக்கிறது.

## பெயர்களின் வகை

(1) பொருட் பெயர்:—நெருப்பு, சோறு
(2) இடப் பெயர்:—வையகம்
(3) காலப் பெயர்:—ஆண்டு
(4) *சினைப் பெயர்:—நெடுஞ்செவியன்
(5) *குணப் பெயர்:—கரியன்
(6) தொழிலால் வந்த பெயர்:—எழுதுகோல்

*இக்குறியிட்ட உதாரணங்கள் இப்பாடத்திலில்லை; மற்ற பாடங்களிலிருந்து எடுத்துக்கூறுக.

# செய்யுட் பகுதி

## 1. நாலடியார்

### கல்வி

1. குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.

குஞ்சி = தலைமயிர்; கொடுந்தானைக்கோடு = கொசுவி வைத்துக் கட்டிய ஆடையின் கரை; கோடு = கரை; மஞ்சள் = பொன்.

2. கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து.

நீரொழியப் பாலுண் குருகில் தெரிந்து = அன்னப்பறவை பாலையும் நீரையும் கலந்து வைத்தால், பாலைப் பிரித்து உண்டு நீரை நீக்கும் என்பது ஒரு கொள்கை. குருகு = அன்னம்.

3. கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தோர் கேண்மை
நுனியிற் கரும்பு தின்றற்றே—நுனிநீக்கித்
தூரில் தின்றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு.

கனை கடல் தண் சேர்ப்ப = ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் நாட்டிற்குத் தலைவனே; நுனியிற் கரும்பு தின்றற்றே = கரும்பை நுனியிலிருந்து அடிவரையில் தின்றால் சுவை மிகுவதைப் போன்றது. பண்பிலா ஈரமிலாளர் தொடர்பு = கல்வியில்லாதவர்களுடைய நட்பு; நுனி நீக்கித் தூரில் தின்றன்ன தகைத்து = கரும்பை வேரிலிருந்து தின்றால் சுவை குறைவதை ஒத்தது.

## 2. திருக்குறள்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அகழ்வார்=தோண்டுகின்றவர்கள்; நிலம்=பூமி; இகழ்வார்=இகழ்ந்து பேசுபவர்கள்; தலை=சிறந்தது.

2. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும் புகழ்.

ஒறுத்தார்=தீமை செய்தவர்களைத் தண்டித்தவர்கள்; பொறுத்தார்=தீமை செய்தவர்களை மன்னித்தவர்கள்; பொன்றுந்துணையும்=(உலகம்) அழியும் வரையில்.

3. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

வித்து=விதை; இடும்பை=துன்பம்.

4. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி.

ஒழுக்கத்தின்=நல்லொழுக்க முடைமையினால்; இழுக்கத்தின்=ஒழுக்கத்திலிருந்து தவறுதலால்; பழி=பாவம்.

5. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைமாட்சி=மனைவியின் உயர்ந்த குணங்கள்; என்ப=என்று சொல்லுவார்கள்; நன்கலம்=நல்ல ஆபரணம்.

6. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

ஆற்றும் நன்றி=செய்யுமுதவி; அவையம்=பெரியோர்கள் கூடிய இடம்; செயல்=செய்வதாகும்.

7. ஈன்ற பொழுதில் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

ஈன்ற பொழுதில் = பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட; பெரிதுவக்கும் = மிக மகிழ்வாள்; சான்றோன் என = கல்வி, அறிவு, ஒழுக்கத்தில் சிறந்தவனென்று உலகத்தார் சொல்ல; தாய் ஈன்றபொழுதில் உவக்கும் எனக் கூட்டுக.

8. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய = இன்சொற்கள்; இன்னாத = கடுஞ்சொற்கள்; காய் கவர்ந்தற்று = காயை யுண்பதுபோலாகும்.

9. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

துணை = அளவு; பயன் தெரிவார் = உதவியின் பயனை யறிந்தவர்கள்.

10. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

நன்றல்லது = தீமையை; அன்றே = செய்த அப்பொழுதே.

11. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்நன்றி = எந்த நன்றி (அதாவது, பெரிய அறம்); கொன்றார் = அழித்தவர்கள்; உய்வு = அந்த குற்றத்தினின்றும் நீங்கும் வழி; மகன் + கு = மகற்கு = மனிதனுக்கு.

12. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

யா = எவைகளையும் (காக்கவேண்டியவைகளை எல்லாம்) காக்கவேண்டியவை மூன்று: மனம், மொழி, மெய். மனத்தைக் காப்பது மன அடக்கம். மொழியைக் காப்பது நா அடக்கம். தீய செயலைத் தடுப்பது மெய்யடக்கம். இம்மூன்றனுள் நா அடக்கமே சிறந்தது. சொல்விழுக்கு = சொல்லால் வருங்குற்றம். இது நா அடக்கமில்லாமையால் வருந் தீமை. சோகாப்பர் = துன்பமடைவார்கள். சோகாப்பர் என்பது ஒரே சொல்.

13. தீயினாற் சுட்ட புண்ணுள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

புண் ஆறுந்தன்மையுடையது; வடு எப்பொழுதும் மறையாது. நெருப்புச் சுடுவதினும் கடுஞ்சொல் அதிகமாகத் துன்பப்படுத்தும் என்பது கருத்து.

14. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்பவை கசடுஅறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க எனக் கூட்டுக. படிக்கவேண்டிய நூல்களைக் குற்றமில்லாமல் திருத்தமாகப் படிக்கவேண்டும். படித்த பிறகு அதன்படி நடக்கவேண்டும்.

15. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கற்றவர்களுடைய கண்ணிற்கும் கல்லாதவர்களுடைய கண்ணிற்குமுள்ள பெருமை சிறுமைகளை இப்பாட்டாலறிக.

16. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

மணல் கேணி தொட்ட அனைத்து ஊறும்; தோண்டிய அளவிற்குத் தக்கபடி நீர் சுரக்கும். கேணி=கிணறு. அறிவு கற்ற அனைத்து ஊறும் எனக் கூட்டுக.

17. எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

முதல் வரியிலுள்ள "என்ப" என்ற இரண்டு சொற்களும் அசை. இச்சொல்லிற்குப் பொருளில்லை. கண் என்ப = கண்ணென்று சொல்லுவார்கள். "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்."

18. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சி=சோம்பலின்றிச் சுறுசுறுப்பாகச் செய்யுங் குணம்; திருவினை=செல்வத்தை; இன்மை=வறுமை; முயற்றின்மை=சோம்பல்; முயற்சியுடையவர்கள் செல்வத்தைப் பெற்று இன்பமாக வாழ்வார்கள். முயற்சியில்லாதவர்கள் வறுமையடைந்து துன்பப்படுவார்கள்.

19. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

பளிங்கு தனக்குள்ளிருப்பதை வெளியே காட்டும். முகம், உள்ளத்திலுள்ளதைப் பிறரறியக் காட்டும். பளிங்கு உபமானம். முகம் உபமேயம். அடுத்ததைக் காட்டுதல் இரண்டினிடத்தும் அமைந்துள்ளது.

20. நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

நீரவர் கேண்மை பிறை நிறை நீர=நல்லவர்களுடைய சிநேகம் பிறைச்சந்திரன் நாளுக்குநாள் வளர்வது

போல, நிறையுந் தன்மையுடையது. பேதையார் நட்பு மதிப்பின்னீர = அறிவில்லாதவர்களுடைய சிநேகம் நிறைந்த சந்திரன் பின் குறையுந் தன்மைபோலாகும்.

21. அறியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பேணி = போற்றி; தமராக் கொளல் = தமக்கு வேண்டியவராகக் கொள்ளுதல். தமராகப் பேணிக்கொளல் என்று கூட்டுக.

22. தினைத்துணையாங்குற்றம் வரினும் பனைத்துணை [யாக்
கொள்வர் பழிநாணு வார்.

தினைத்துணை = தினையளவு; பனைத்துணை = பனையளவு; நாணுவார் = அஞ்சுபவர்கள்; பழி = பாவச்செய்கை.

23. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார் [க்கு
அரும்பொருள் யாதொன்று மில்.

தெரிந்த இனத்தொடு = ஆராய்ந்தறிந்த பெரியோர்களோடு; எண்ணி = தானும் ஆராய்ந்து; அரும்பொருள் = ஆகாத காரியம்.

24. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

ஆக்கம் = வாழ்வு; கேடு = அழிவு; அதனுல் = சொல்லால்; சோர்வு = பிழை; ஓம்பல் = காத்தல்.

# 3. இரட்சணிய யாத்திரிகம்

## இகபர சந்திப் படலம்

### உத்தாசுருதி

1. ஆதிமெய்த்திருவாக்காயவகிலகாரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே
போற்றி

மாதுவித் தாகி யிந்த மாநிலம் புரப்ப லென்று
தாதைபாற் பரிந்து நின்ற தற்பரா போற்றி
போற்றி.

இச்செய்யுளின் முதலடிக்கு, இயேசுநாதர் மனித உரு வத்தோடு பிறக்குமுன், இறைவனுடைய திருவாக்காக இருந்தார்; அத்திருவாக்காகிய ஒலிவடிவமே இயேசு வின் உருவம் என்பது கருத்து.

கோது = குற்றம்; குவலயம் = பூமி; மாது வித்து ஆகி = தாயினிடமிருந்து தோன்றி; புரப்பல் = காப்பாற்று வேன்; தாதை = தந்தையாகிய கடவுள்.

2. பன்னரு மஹிமை யோடு பண்ணவர் பரவி யேத்த
உன்னரும் பரமா காயத் துச்சிவீற் றிருந்தாய்
போற்றி

புன்னரர் பொருட்டுப் பாவப் புலையுலகத்து மேவிக்
கன்னிபா லுதித்தாய் போற்றி கருணைவா ரிதியே
போற்றி.

பண்ணவர் = தேவர்; பரமாகாயம் = மோக்ஷம்; புல் நரர் = அற்பமாகிய மனிதர்; புலை உலகு = இழிந்த உலகு; கருணை வாரிதி = அருட்கடல்,

3. வறிதுபுல் லணையிற் கந்தை வனைந்தொரு குழவி
யாகி
அறிதுயி லமர்ந்தாய் போற்றி யலகில்பல் லுயிரை
யூட்டிச்
செறிதரு பசிக்காற் றூது தேம்பிநின் றழுதாய்
போற்றி
நெறிதிக ழறவோ ராயர் நேர்ந்தநின் மலனே
போற்றி.

புல் அணை = புல் படுக்கை; வனைந்து = அணிந்து; அறி துயில் = மனிதர்கள் தூங்குவதுபோ லல்லாமல் எல்லா வற்றையும் உணர்ந்து செய்யும் தூக்கம்; அலகு இல் பல் உயிர் = அளவில்லாத பல உயிர்கள்; அறவோர் ஆயர் நேர்ந்த = புண்ணியவான்களாகிய ஞானிகளும், இடையர்களும்கண்ட.

4. ஈசனு ருரைகொண் டேகி யெகிப்துநா டடைந்து
மீண்டு
நாசரேத் தூர்வந் துற்ற நசரெய நம்பி போற்றி
ஆசற வளர்ந்து பெற்றோர்க் கமைந்திடு மைய
போற்றி
தேசிக ஞான தீக்ஷை செவ்விதி னடைந்தாய்
போற்றி.

ஈசனுர் உரை = ஆண்டவன் "இவ்விடம் தீங்கு நேரும்; ஆகையால் நீங்கள் எகிப்து தேசத்துக்குப் போவீர்க" என்று கூறிய மொழி; நசரெய நம்பி = நாசரேத் என்னும் ஊரில் வளர்ந்த சிறந்த மனிதன்; செவ்விதின் = நன்றாக.

5. அம்முறை விரத மேற்கொண் டாரணி யத்து
மேவிச்
செம்முறை திறம்பா வண்ணம் ஜெபதபம் புரிந்
தாய் போற்றி

மும்முறை முனிந்து பேயை முடுக்கிய முனிவா
போற்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கிடு மெந்தாய்
போற்றி.

ஆரணியம் = பாலைவனம்; செம்முறை = நல்ல முறை; பேய் = சாத்தான்; மும்முறை = மூன்று சோதனைக் காலத்திலும்; எம்முறைபாடு = எங்களுடைய வேண்டுகோள்.

6. வந்தது பரம ராஜ்யம் மனந்திரும் புங்க ளென்று
முந்துப தேசஞ்செய்த முத்திவித் தகனேபோற்றி
சிந்தனை கசிந்தீ ராறு சீஷரை யழைத்தாட்
கொண்டு
விந்தையாய்ப் பரம ஞானம் விளம்பிய குருவே
போற்றி.

முத்தி வித்தகன் = முத்தியைத் தரக்கூடிய பெரியோன்; விந்தையாய் = புகழத் தகுந்த வகையாய்.

7. முழுதுநா னறியே னென்று மும்முறை மறுத்த
சீடன்
அழுதுளங் கசக்கச்செய்யு மருணோக்க முடையாய்
போற்றி
பழுதின்மை யறிந்தும் வேந்தன் படுகொலைத் தீர்ப்
புக் கூற
இழுதைய ரிகழ நின்ற ஏசுநா யகனே போற்றி.

சீடன் = பேதுரு; உளம் கசக்க = மனம் வருந்த; அருள் நோக்கம் = அருளோடு கூடிய பார்வை; வேந்தன் = அரசன்; இழுதையர் = கீழானவர்கள். ஏசுவைத் துன்புறுத்திய யூதர்.

8. பொங்குநீ ருலகுக்கெல்லாம் புண்ணியம் பொலியப் பாவ
சங்கடந் தொலைய நாளுந் தனியறந் தழைப்ப வேத
மங்கல வோசை மல்க வானவர் மகிழ மீட்டும்
இங்குயிர்த் தெழுந்தி ரக்ஷை யீட்டிய வேந்தாய் போற்றி.

சங்கடம் = துன்பம்; தனி அறம் = ஒப்பற்ற தருமம்; உயிர்த்தெழுந்து = அடக்கம் செய்யப்பட்ட இடத்திலிருந்து மூன்றும் நாள் உயிர்பெற்றெழுந்து; இரக்ஷை = மீட்சி அல்லது மீட்பு.

9. மலங்கிய சீட ரோடு வைகலீ ரிருபான் வைகி
நலங்கிளர் வாக்குக் கூறி நயந்தொரு முகின் மீதேகி
இலங்குமைங் காயங் காட்டி யெம்பிரான் றிருமு னென்றும்
வலங்கிள ரணைமீ துற்ற மாநுவே லரசே போற்றி.

மலங்கிய = வருந்துகின்ற; வைகல் ஈரிருபான் = நாற்பது நாள்; முகில் = மேகம்; ஐங்காயம் = ஐந்து காயம். சிலுவையில் அறைபட்டபோது இரண்டு கைகளிலும் இரண்டு கால்களிலும் விலாப்புறத்தும் அடைந்த காயங்கள்.

10. மூதுல கருக்கு ஜீவ முக்திசா தனமுண் டாகக்
கோதறு புனித வாவிக் கொழுங்கதிர்ப் பிழம்பை நல்கிக்
காதலுற் றடைந்தோர் தம்மைக் காப்பது கருதி யென்றுந்
தாதைபாற் பரிந்து பேசுந் தயாபரா போற்றி போற்றி.

முக்தி சாதனம் = மோக்ஷமடையும் வழி; புனித ஆவி = பரிசுத்த ஆவி; ஆவியாகிய ஒளிப்பிழம்பு என்று கூட்டுக; தாதை பால். பால் 7-ம் வேற்றுமை உருபு.

86503
TB
031(1)
N48

விலை 12 அணா